ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351





சனி ❖ டிசம்பர். 09, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 65 ❖ ரூ.10

### பாஜகவுக்கு எதிராக அடுத்த 30 ஆண்டுகள் போராடுவேன்

# சூளுரை

## முழுக்க முழுக்க அதானி என்ற ஒருவருக்காகவே பாஜக ஆட்சி நடக்கின்றது
## எம்.பி. பதவியில் இருந்து நீக்கப்பட்ட மஹுவா மொய்த்ரா

புதுடெல்லி , டிச. 9–

"இன்னும் 30 ஆண்டுகளுக்கு நான் உங்களுக்கு (பாஜக) எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே இருந்தும், உள்ளே வந்தும் கேள்வி கேட்பேன்" என்று ஆவேசமாக சூளுரைத்துள்ளார் எம்.பி. பதவியில் இருந்து நீக்கப்பட்ட திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மஹுவா மொய்த்ரா.



பணம் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதாக கூறப்படும் குற்றச்சாட்டில், திரிணமூல் காங்கிரஸ் எம்.பி மஹுவா மொய்த்ரா நேற்று (வெள்ளிக்கிழமை) பதவி நீக்கம் செய்யப்பட்டார். தனது பதவி பறிக்கப்பட்டப் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அவருடன் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி உள்பட பல்வேறு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இருந்தனர். அப்போது மஹுவா கூறும்போது, "நான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப பணமோ, பொருட்களோ பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை. எனது மின்னஞ்சலை பயன்படுத்தும் அதிகாரம் பகிரப்பட்டது என்ற ஒரே ஒரு ஆதாரத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அப்படிப் பார்த்தால் மின்னஞ்சல் விவரங்களைப் பகிரக் கூடாது என்ற சட்டதிட்டங்களும் இல்லை.

ஒருவேளை, நாடாளுமன்றத்தில் என் வாயை அடைத்துவிட்டால் போதும், அதானி பிரச்சினை தீர்ந்துவிடும் என மோடி அரசு நினைக்கிறதுபோல். ஆனால், நீங்கள் ஒரு பெண் எம்.பி.யின் வாயை அடைக்க எந்த எல்லை வரை செல்வீர்கள் என்பதையே இந்த பதவிப் பறிப்பு நிகழ்வு காட்டுகிறது. நாளையே எனது வீட்டுக்கு சிபிஐ அதிகாரிகள் அனுப்பப்படுவார்கள். பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. டேனிஷ் அலியை பாஜக எம்.பி. ரமேஷ் பிதூரி அவதூறாகப் பேசியபோது அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது சிறுபான்மயினர் மீது பாஜக என்ன மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்று. பெண்கள், சிறுபான்மையினருக்கு எதிராக இந்த ஆட்சி செயல்படுகின்றது. முழுக்க முழுக்க அதானி என்ற ஒருவருக்காகவே பாஜக ஆட்சி நடக்கின்றது.

மக்களவை நெறிமுறைக் குழுவுக்கு என்னை வெளியேற்ற எந்த அதிகாரமும் இல்லை. ஆனால், இந்த அரசு நாடாளுமன்ற நெறிமுறைக் குழுவினை எதிர்க்கட்சிகளை 'புல்டோஸ்' செய்யும் ஆயுதமாக மாற்றி இருக்கிறது. நெறிமுறைக் குழு உருவாக்கப்பட்டதன் நோக்கம் இதுவே அல்ல. எனக்கு இப்போது 49 வயதாகிறது. நான் இன்னும் 30 ஆண்டுகளுக்கு பாஜகவுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் போராடுவேன். இது பாஜக ஆட்சி முடியும் காலம். நான் மீண்டும் வருவேன்" என்றார்.

நாடாளுமன்றத்தில் அதானிக்கு எதிராக கேள்வியெழுப்ப தொழிலதிபர் ஹிராநந்தானியிடம் திரிணமூல் எம்பி மஹுவா மொய்த்ரா லஞ்சம் பெற்றது தொடர்பான குற்றச்சாட்டு குறித்து பாஜக எம்.பி., வினோத் குமார் சோன்கா தலைமையிலான மக்களவை நெறிமுறைக் குழு விசாரணை நடத்தி, அதன் அறிக்கையை நவ.9–ஆம் தேதி வெளியிட்டது. அந்த அறிக்கையில், மஹுவா மொய்த்ராவை பதவி நீக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திரிணமூல் காங்கிரஸ் எம்.பி மஹுவா மொய்த்ராவை பதவி நீக்கம் செய்யக் கூறும் மக்களவை நெறிமுறைக் குழு பரிந்துரை நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியபோது அவையில் கடுமையான அமளி நிலவியது. மஹுவா தனது தரப்பு கருத்தை முன்வைக்க விரும்பினார். ஆனால், அவருக்கு அவையில் பேச அனுமதி அளிக்கப்படவில்லை. மஹுவாவுக்கு அவையில் பேச அனுமதி அளிக்கக் கோரி மக்களவையில் எதிர்க்கட்சியினர் குரல் எழுப்பினர். கடும் அமளிக்கு மத்தியில் மஹுவா மொய்த்ரா பதவி நீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா கூறுகையில், "மக்களவை நெறிமுறைக் குழு பரிந்துரைக் குழுவின் அறிக்கையை ஏற்கப்படுகிறது. மஹுவா மொய்த்ராவின் நடவடிக்கை அறமற்றது, அநாகரிகமானது. அவையின் மாண்பை சிதைக்கும் வகையில் மஹுவா செயல்பட்டுள்ளார். அதனால் அவர் மக்களவை உறுப்பினராகத் தொடர இயலாது" என்று தெரிவித்தார்.

### பதவி பறிப்பின் பின்னணி என்ன?

மேற்கு வங்கத்தின் கிருஷ்ணாநகர் மக்களவைத் தொகுதியின் திரிணமூல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா. இவர் மக்களவையில் இதுவரை 61 கேள்விகளை எழுப்பியுள்ளார். இதில் 50 கேள்விகள் அதானி குழுமம் தொடர்பானவை. இந்த கேள்விகளை எழுப்ப ரியல் எஸ்டேட் தொழிலதிபர் ஹிராநந்தானியிடம் இருந்து மொய்த்ரா ரூ.2 கோடி வரை லஞ்சமாக பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது. மேலும், மொய்த்ராவின் நாடாளுமன்ற இணைய கணக்கை துபாயில் வசிக்கும் ஹிராநந்தானி பயன்படுத்தியதும் கண்டுபிடிக்கப்பட்டது.

மொய்த்ராவின் முன்னாள் காதலர் ஜெய் ஆனந்த் தேஹத்ராய் இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தினார். இதை ஆதாரமாக வைத்து பாஜக எம்பி நிஷிகாந்த் துபே மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் புகார் அளித்தார். இதுதொடர்பாக நாடாளுமன்ற நெறிமுறைகள் குழு விசாரணை நடத்தி, மொய்த்ராவை பதவி நீக்கம் செய்ய பரிந்துரை செய்தது. நெறிமுறைக் குழு விசாரணையின்போது மஹுவா பாதியிலேயே வெளியேறினார். மேலும், நெறிமுறைக் குழு தலைவர் அநாகரீகமான கேள்விகளை எழுப்புவதாக குற்றம் சாட்டினார். ஆனால், உண்மையான கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்ப்பதற்காகவே மஹுவா இந்த நாடகத்தை ஆடியதாகவும், இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவருக்கு துணை போனதாகவும் நெறிமுறைக் குழு தலைவர் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மிக்ஜாம் புயல் நிவாரண நிதிக்கு

# ஒருமாத ஊதியத்தை வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

### அனைத்து எம்எல்ஏக்கள், எம்பிக்களும் நிதி அளித்திட வேண்டுகோள்

சென்னை, டிச. 9–

மிக்ஜாம் புயல் நிவாரணத்துக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒருமாத சம்பளத்தை வழங்கினார்.



இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தியில், மிக்ஜாம் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குகின்றேன். அனைத்து சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி அளித்திடுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். மிக்ஜாம் புயலால் கடந்த டிசம்பர் 2 முதல் 4ம் தேதி வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த மழை என்பது, 47 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவிலான பெருமழை. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இந்தப் பேரிடர் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே ஏற்பட்டுள்ள பேரிடர். மழைநீர் வடிகால் பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்தி இருந்ததால்தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. அதேபோல் அனைத்துத் துறைகளும் பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையில் இருந்ததும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வைத்திருந்ததும் இணைந்து மக்களைக் காத்துள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் நடைபெற்ற மீட்புப் பணிகளின் காரணமாக மூன்று நாட்களுக்குள் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி உள்ளது.

குறிப்பிட்ட சில பகுதிகளில் மீட்புப் பணி நடந்து வருகிறது. இத்தகைய அசாதாரண நேரத்தில் அனைத்துத் தரப்பும் மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவியாக நல்லுள்ளங்கள் பலர் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது. எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம்.

இச்சூழலில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதன் தொடக்கமாக என்னுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடுமாறு கேட்டு கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## டிச.26ல் அதிமுக பொதுக்குழு கூட்டம் : இபிஎஸ் அறிவிப்பு

சென்னை, டிச. 9–

அதிமுக பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் டிசம்பர் 26ம் தேதி சென்னை வானகரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



மக்களவை தேர்தல் குறித்த அறிவிப்பு இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் அதிமுக பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் தொடர்பான அறிவிப்புகள் வெளியாகியுள்ளது. சசிகலா மற்றும் ஓபிஎஸ் தொடர்ந்த வழக்குகளில் இபிஎஸ் தொடர் வெற்றி கண்டு வரும் நிலையில், ஒற்றைத்தலைமையாக எந்த விதமான இடர்பாடுகளும் இல்லாத நிலையில் இந்த கூட்டத்திற்கு எடப்பாடியார் அழைப்பு விடுத்துள்ளார்.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில், ''கட்சி விதிகளின் படி அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வரும் 26ம் தேதி சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீ வாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெறும்.

பொதுக்குழுசெயற்குழு உறுப்பினர்களுக்கு தனித்தனியே அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்படும். அனைவரும் அழைப்பிதழ்களுடன் பங்கேற்கவேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

## மிசோரம் முதல்வராக சோரம் மக்கள் இயக்கத் தலைவர் லால்துஹோமா பதவியேற்பு

ஐஸ்வால், டிச. 9–

மிசோரம் முதல்வராக சோரம் மக்கள் இயக்கத் தலைவர் லால்துஹோமா பதவியேற்றார். மாநில ஆளுநர் ஹரி பாபு கம்பம்பட்டி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.



மிசோரமில் ஒரே கட்டமாக கடந்த நவம்பர் 7ம் தேதி தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 40 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 27 தொகுதிகளைக் கைப்பற்றி சோரம் மக்கள் இயக்கம் ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து, மிசோ தேசிய முன்னணியின் தலைவரான சோரம் தங்கா முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், புதிய அரசு பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதில், மிசோரம் முதல்வராக சோரம் மக்கள் இயக்கத் தலைவர் லால்துஹோமா பதவியேற்றார். இதையடுத்து, சோரம் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த 11 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றனர். அனைவருக்கும் மாநில ஆளுநர் ஹரி பாபு கம்பம்பட்டி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

விழாவில், முன்னாள் முதல்வர் சோரம் தங்கா, மிசோ தேசிய முன்னணியின் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர் லால்சந்தாமா ரால்டி, முன்னாள் முதல்வர் லால் தான்ஹாவ்லா உள்ளிட்டோர் பங்கேற்று, புதிய ஆட்சியாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

முன்னதாக, சோரம் மக்கள் இயக்கத்தின் சட்டமன்றக் குழு தலைவராக லால்துஹோமாவையும், துணைத் தலைவராக சப்தங்காவையும் அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்கிழமை தேர்வு செய்தனர். சோரம் மக்கள் இயக்கம் கடந்த 2019ம் ஆண்டுதான் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்படுவதற்கு முன் கடந்த 2018–ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் இந்த இயக்கம் 8 இடங்களில் வெற்றி பெற்றது. இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட குறுகிய காலத்தில் ஆட்சியைப்பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டியலினத்தவர்கள், பழங்குடியினருக்கு எதிரானது பாஜக ஆட்சி – கார்கே குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 9–

பாஜக ஆட்சியில் நாடு முழுவதும் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.



காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பாஜக ஆட்சியில் நாடு முழுவதும் பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் இது பாஜகவின் பிரித்தாளும் கொள்கை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியதாவது, 'தேசிய குற்றவியல் பதிவுகள் அமைப்பின் அறிக்கை புள்ளிவிவரங்களை மட்டும் காட்டவில்லை, பாஜக ஆட்சியில் பட்டியலினத்தவர்கள் மற்றும் பட்டியலின மக்களின் வாழ்வு பாதுகாப்பின்றி இருப்பதையும் காட்டுகிறது. அநீதி, கொடுமைகள் மற்றும் அடக்குமுறை ஆகியவை கடந்த 10 ஆண்டுகளாக பாஜக செய்துவந்த சதித் திட்ட கொள்கையினால் ஏற்பட்டவை' எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் பாஜக–ஆர்எஸ்எஸ் கட்சிகளின் அடக்குமுறையைத் தொடர்ச்சியாக எதிர்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கார்கே பகிர்ந்துள்ள பதிவில், 2013–க்குப் பிறகு பட்டியலினத்தவர்களுக்கு எதிரான குற்றங்கள் 46.11 சதவீத அளவிற்கும் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் 48.15 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"நீங்கள் புத்திசாலியான மனிதராக இருந்தால், இயல்பாகவே நீங்கள் அன்பாகவும் இணைத்துக்கொள்ளும் தன்மையுடனும் இருப்பீர்கள்."






## புதுக்கோட்டை எச்டிஎப்சி வங்கியில் இரத்ததான முகாம்




புதுக்கோட்டை , டிச. 9–

புதுக்கோட்டை எச்டிஎப்சி வங்கியும், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி நிர்வாகமும் இணைந்து நடத்திய இரத்ததான முகாமை ஏவிசிசி கல்வி குழுமங்களின் தலைவரும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முன்னாள் திட்ட இயக்குநருமான ஏவிசிசி கணேசன் ஆலங்குடி சாலையில் உள்ள எச்டிஎப்சி வங்கி வளாகத்தில் வங்கி முதன்மை மேலாளர் அசோக்குமார் முன்னிலை நேற்று குத்து விளக்கேற்றி முகாமை தொடங்கி வைத்து இரத்ததானம் வழங்கியவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து சான்றுகள் வழங்கினார். அரசு கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஏவிசிசி கல்விக்குழும பணியாளர்கள், வங்கி அலுவலர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் உட்பட 163 பேர் பங்கேற்றனர். வங்கியின் திட்ட மேலாளர் ஜோன்ஸ்பெர்க்

மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி இரத்தவங்கி மருத்துவர் சரவணன் தலைமையிலான குழுவினர் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## வேளச்சேரியில் 2 பேரை பலிவாங்கிய கோர விபத்து எதிரொலி கட்டுமான நிறுவனத்தின் மேற்பார்வையாளர்கள் 2 பேர் கைது



சென்னை : டிச. 9–

வேளச்சேரியில் 2 பேரை பலிவாங்கிய கோர விபத்து எதிரொலியாக கட்டுமான நிறுவனத்தின் மேற்பார்வையாளர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை வேளச்சேரி ஐந்து பர்லாங் சாலை அருகே அமைந்துள்ள பெட்ரோல் பங்க் அருகில் கட்டுமான பகுதிக்காக சுமார் 50 அடி ஆழ பள்ளம் தோண்டப்பட்டது. பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக இந்த பள்ளத்தில் 8 பேர் சிக்கினர். தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்பு படையினர் மற்றும் மீட்பு படையினர் பள்ளத்தில் சிக்கிய 8 பேரில் 6 பேரை பத்திரமாக மீட்டனர்.

இருப்பினும், பள்ளத்தில் சிக்கிய பெட்ரோல் பங்க் ஊழியர் நரேஷ் என்பவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார். அதேபோல் கட்டுமான பொறியாளர் ஜெயசீலன் என்பவரும் சடலமாக மீட்கப்பட்டார். இருவரும் இளைஞர்கள் ஆவர். ஜெயசீலனின் சடலமானது ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. ஜெயசீலனுக்கு திருமணமாகி 9 மாதங்களே ஆகிறது. அவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருக்கிறார் என்ற தகவல் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், 2 பேரை பலிவாங்கிய கோர விபத்து எதிரொலியாக கட்டுமான நிறுவனத்தின் மேற்பார்வையாளர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுமான மேற்பார்வையாளர்கள் எழில், சந்தோஷ் ஆகியோரை வேளச்சேரி போலீசார் கைது செய்தனர். பணியின்போது உரிய பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாததை அடுத்து வேளச்சேரி போலீஸ் வழக்குப்பதிந்து நடவடிக்கை எடுத்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரிடமும் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.






## கதறும் திமுக : சென்னை மேயரை முற்றுகையிட்ட சொந்த வார்டு மக்கள்



சென்னை : டிச. 9, மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த கனமழையில் சென்னை பெரும் சேதத்தை சந்தித்திருக்கிறது. குறிப்பாக வடசென்னை பகுதிகளில் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்த வெள்ளம் இன்னும் வடியாத நிலையில், மக்கள் கடும் விரக்திக்குள்ளாகி உள்ளனர்.

சென்னை மாநகர மேயர் பிரியாவின் சொந்த வார்டில் தொடர்ந்து இதுவரை மின்சார விநியோகம் சீர்செய்யப்படாததால் அப்பகுதி மக்கள், மேயர் ப்ரியாவை முற்றுகையிட்டு கேள்வி ஆவேசமாக எழுப்பிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சென்னை பெரம்பூர் மற்றும் திருவிக தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணன்தாஸ் சாலையில் வசித்து வரும் மேயர் பிரியாவின் இல்லத்தை 71வது வார்டு பொதுமக்கள் திடீரென முற்றுகையிட்டனர். திடீரென பொதுமக்கள் திரண்டு வருவதைக் கண்டு சற்றும் அசராத மேயர் பிரியா பொதுமக்களிடம் நிலைமையை விளக்கி கூறினார். மின்சாரம் உள்ளிட்டவை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

சென்னையில் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், ஒருசில இடங்களில் இன்னும் மின்சார விநியோகம் சீர்செய்யப்படாததால், பொதுமக்கள் தங்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை சமாளிப்பதே திமுகவினருக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ளது. தொடர்ந்து மூன்று நாட்களாக தங்களுக்கு மின்சாரம், குடிநீர் இல்லை என்றும் கழிவுநீர் செல்ல வழி இல்லை என்றும் மழைநீர் அகற்றப்படவில்லை என்றும் மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

முன்னதாக அமைச்சர் உதயநிதி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட சென்றபோது ஆசிரியை ஒருவர் ஆவேசமாக அடுத்தடுத்து கேள்விகள் எழுப்பிய நிலையில், வேளச்சேரி பகுதிகளில் எம்.எல்.ஏவை முற்றுகையிட்ட மக்கள், அமைச்சர் நேரு பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட சென்ற போதும் ரூ.4,000 கோடி குறித்து சரமாரியாக கேள்விகளை எழுப்பினார்கள். உணவுவழங்க சென்றிருந்த பாஜக தலைவர் அண்ணாமலையையும் பொதுமக்கள் கடுமையாக விமர்சித்து, திருப்பியனுப்பினார்கள். சுகாதாரத்துறை அமைச்சரின் சொந்த தொகுதி.. சொந்த வார்டு இது... இந்த தெருவின் லட்சணத்தைப் பாருங்க என்று சைதாப்பேட்டையின் அவல நிலை குறித்து வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஒருபக்கம் மீட்பு பணிகளில் இரவு பகலாக மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வந்தாலும், நிலைமை இன்னும் சீரடைந்து கட்டுக்குள் வராததால், திமுக அமைச்சர்களிடம், தலைவர்களிடமும் பொதுமக்கள் தங்கள் அதிருப்தியை தெரிவித்து வருகின்றனர்.

## "மிக்ஜாம் புயல் பாதிப்புக்குள்ளான 4 மாவட்டங்களில் பால் விநியோகம் சீரானது" : கூடுதல் விலைக்கு விற்ற முகவர்கள் உரிமம் ரத்து

### அமைச்சர் மனோ தங்கராஜ் பேட்டி



சென்னை, டிச. 9–

மிக்ஜாம் புயல் பாதிப்புக்குள்ளான சென்னை உட்பட 4 மாவட்டங்களில் பால் விநியோகம் சீரானது என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயலால் சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியதால், அத்தியாவசிய தேவைகளான பால், குடிநீர், உணவு ஆகியவை கிடைக்காமல் மக்கள் பாதிக்கப்பட்டனர். சென்னையில் கடந்த 2 நாட்களாக பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. குறைவான அளவு பால் வந்ததால், அதை வாங்க மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை உருவானது. இதனிடையே, சென்னையில் தற்போது நிலைமை படிப்படியாக சீராகியுள்ளது.

இந்நிலையில், சென்னை அடையாறில் உள்ள ஆவின் பாலகத்தில் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர், மிக்ஜாம் புயல் பாதிப்புக்குள்ளான சென்னை உட்பட 4 மாவட்டங்களில் பால் விநியோகம் சீரானது. வெள்ள பாதிப்பால் ஆவின் பணியாளர்கள் வருவதில் சிரமம் இருந்தது. தற்போது சீராகி உள்ளது. சென்னை முழுவதும் தங்குதடையின்றி ஆவின் பால் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னையில் ஆவின் பால் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை.

இக்கட்டான சூழலிலும் வழக்கத்தை விட நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகமாக பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது, அதிகபட்சமாக 25 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பால் வாங்குவதில் பொதுமக்களிடம் நேற்று பதற்றம் இல்லை. சோழிங்கநல்லூர், மாதவரம், அம்பத்தூர் பால் உற்பத்தி நிலையங்கள் மீண்டும் முழுமையாக செயல்பட தொடங்கியுள்ளன. கூடுதல் விலைக்கு ஆவின் பாலை விற்பனை செய்த சில முகவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## வங்கிகளின் குறுகியகால கடனுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமில்லை : இந்திய ரிசர்வ் வங்கி



புதுடில்லி : டிச. 9, வங்கிகளின் குறுகியகால கடனுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமில்லை என இந்திய ரிசர்வ் வங்கி தகவல் தெரிவித்துள்ளது.

ரெப்போ வட்டி விகிதம் 6.5 சதவீதமாக நீடிக்கும் என ரிசர்வ் வங்கி கவர்னல் சக்திகாந்த் தாஸ் தகவல் தெரிவித்துள்ளார். ரெப்போ ரேட் எனும் வங்கிகளுக்கான குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமின்றி 6.5 சதவிகிதமாக தொடரும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி கந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

வட்டி விகிதங்களில் மாற்றம் குறித்து இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நிதிக்கொள்கைக் குழு கூட்டம் நேற்று தில்லியில் நடைபெற்றது. கூட்டத்தில் வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. வங்கிகளின் குறுகியகால கடனுக்கான வட்டி விகிதம் 6.5 சதவீதம் என்ற அளவிலேயே தொடர்கிறது. நாட்டின் பணவீக்க விகிதம் கட்டுக்குள் இருப்பதால் ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் பணவீக்க விகிதம் 5 சதவீதத்துக்கு மேல் தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்ததாஸ் கணித்துள்ளார். பணவீக்க விகிதத்தை கட்டுக்குள் வைக்கும் நடவடிக்கைகள் தொடரும் என கூறியுள்ளார்.

### 'சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்'

## கோடநாடு வழக்கில் எடப்பாடி பழனிசாமிக்கு அதிர்ச்சி கொடுத்த நீதிமன்றம்



சென்னை : டிச. 9, ''கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கக்கோரி எடப்பாடி பழனிசாமி கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியை சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ம் ஆண்டு தற்போதைய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்டஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது எனவும், தமது வீட்டில் சாட்சியத்தை பதிவுசெய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமெனவும் கோரி எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை ஏற்ற உயர் நீதிமன்றம், நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்ததோடு, இந்த நடைமுறையை அவரது வீட்டில் மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையராக எஸ்.கார்த்திகை பாலனை நியமித்தது. இந்த உத்தரவை எதிர்த்து மேத்யூ சாமுவேல் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, காலில் ஏற்பட்ட காயம் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக எடப்பாடி பழனிசாமி, நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என அவர் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்தார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், ''சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கக்கோரி எடப்பாடி பழனிசாமி கூறும் காரணங்கள் ஏற்கும்படியாக இல்லை. சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்'' என அதிருப்தி தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இது குறித்து விரிவாக வாதிட அனுமதிக்க வேண்டுமென மூத்த வழக்கறிஞர் எஸ்.ஆர்.ராஜகோபால் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் வழக்கின் விசாரணையை டிசம்பர் 15ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.



மிக்ஜாங் புயல் நிவாரணமாக முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று சென்னை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியை சார்ந்த காசிம் ரைஸ் மில் உரிமையாளரும், திமுக பிரமுகர்மான பாவாசா செல்லாப்பா 5000 லிட்டர் குடிநீர் மற்றும் தனக்கு சொந்தமான நான்கு சக்கர பொருட்கள் ஏற்றும் வாகனத்தை நிவாரண பொருட்களை சேகரிக்க தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணசுந்தரி குமரவேல் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் ஆகியோரிடம் நேரில் வழங்கினார். அப்போது வார்டு கவுன்சிலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

## இந்துக்களை இழிவுபடுத்துவதை நிறுத்துங்கள்– திமுகவை சாடும் சமாஜ்வாதி கட்சி



உத்திரபிரதேசம் : டிச. 9–

இந்து மதம் குறித்து அவதூறாக கருத்து தெரிவித்த தி.மு.கவுக்கு இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள சமாஜ்வாதி கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தி.மு.க இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி, சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு பா.ஜக கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணியிலும் இந்த விவகாரம் சலசலப்பை ஏற்படுத்தியது.

இச்சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் தி.மு.க எம்.பி செந்தில்குமார் சட்டசபை தேர்தலில் பா.ஜ.க வெற்றி பெற்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் உள்ளிட்ட இந்தி பேசும் மாநிலங்களை இழிவுபடுத்தி பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். வட மாநிலங்களிலும் எதிர்ப்பு கிளம்பியதால் செந்தில்குமார் தனது பேச்சுக்கு மன்னிப்பு கேட்டார்.

இந்நிலையில் இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு கட்சியான சமாஜ்வாதி முதல் முறையாக இந்து மதம் குறித்த விமர்சனத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சமாஜ்வாதி மூத்த தலைவரும், அக்கட்சி தலைவர் அகிலேஷ் யாதவுக்கு நெருக்கமானவருமான ஐ.பி.சிங் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

'யாராவது இஸ்லாம் மதம் குறித்து சர்ச்சையாக பேசினால், முஸ்லிம்கள் ஒன்று திரண்டு போராட்டம் நடத்துகின்றனர். ஆனால், சில இந்துக்கள், தங்களது கடவுள், வேதங்கள், புராணங்கள், கலாசாரம் மற்றும் பாரம்பரியம் குறித்து தினமும் கேலி, கிண்டல் செய்து வருகின்றனர். தி.மு.க. தலைவர்கள் இந்து மதத்தை பற்றியும், கடவுள் பற்றியும் தினந்தோறும் இழிவான வார்த்தைகளை பேசி வருகின்றனர். அவர்கள் இந்து மதத்தை துறந்துவிட்டனரா? கிறிஸ்தவ மதத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டால், பிறகு எப்படி இந்து மதத்தை விமர்சிக்கின்றனர். இந்து மதத்தை பிடிக்காதவர்கள், வேறு மதத்திற்கு சென்றுவிடுவதுடன், விமர்சிப்பதை நிறுத்த வேண்டும். இதற்கு ஒரு முடிவுகட்ட ஒரு கண்டிப்பான சட்டத்தை இயற்ற வேண்டும் அல்லது இந்து மதத்தின் கண்ணியம் அழிக்கப்படும்' என்று ஐ.பி.சிங் கூறியுள்ளார்.

### தரங்கம்பாடி பேரூராட்சி சார்பில் சென்னை மிக்ஜாங் புயலில் பாதிக்கப்பட்ட

## மக்களுக்கு நிவாரணமாக உணவுப் பொருள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் மாத மதிப்பு தொகைகளை வழங்கினர்



தரங்கம்பாடி, டிச– 09:

மிக்ஜாங் புயல் நிவாரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வேண்டுகோளுக்கிணங்க மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் அறிவுறுத்தலின்படி சென்னை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி சார்பாக குடிநீர் மற்றும் உணவுப் பொருட்கள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் டிசம்பர் மாதத்தின் மதிப்பு தொகையை நிவாரணமாக இரண்டு வாகனங்கள் மூலம் சென்னைக்கு அனுப்பி வைப்பதற்காக பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள், பொதுமக்களிடமிருந்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் வர்த்தக சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் திரட்டிய உணவுப் பொருட்கள் மற்றும் நிவாரண தொகைகளை ஒருங்கிணைத்து தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து நேற்று சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன். ராஜேந்திரன், பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன், சுகாதார ஆய்வாளர் இளங்கோவன் மற்றும் வார்டு கவுன்சிலர்கள், அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கும் கோடம்பாக்கம் மண்டலம்



▶ சென்னை, பெருநகர மாநகராட்சி மண்டலம் 10 உட்பட்ட விருகம்பாக்கம் சைதாப்பேட்டை மற்றும் தியாகராய நகர் ஆகிய பகுதிகளில் புயல் மழை காரணமாக இப்பகுதியில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு கோடம்பாக்கம் உதவி ஆணையர் அவர்கள் தலைமையில் உதவி வருவாய் அலுவலர்கள் நாள் ஒன்றுக்கு மூன்று வேலையும் உணவு சமைத்து 75 ஆயிரம் பேருக்கு 30-11-2023 முதல் 8-12-2023 வரை கோடம்பாக்கம் மண்டல 10 அலுவலகம் அருகே உள்ள சமுதாய நலக் கூடத்தில் உணவு வழங்கப்பட்டு வருகிறது

# காட்டுமன்னார்கோயில் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு

காட்டுமன்னார்கோயில், டிச.09-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் எம்.ஜி.ஆர்., அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது.



கல்லூரியின் போதைப்பொருள் தடுப்பு குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் முனைவர். மீனா தலைமை தாங்கினார். காட்டுமன்னார்கோயில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மணிகண்டன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கினார்.

மேலும் விழிப்புணர்வு ஓவிய போட்டி, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கணித துறை தலைவர் பூபாலன், மற்றும் துறை பேராசிரியர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர், கவுரவ விரிவுரையாளர்கள் இளையராஜா, அனுமாதா, ரேவதி உட்பட பலர் பங்கேற்றனர். போதைப்பொருள் தடுப்பு குழு உறுப்பினர் பேரா நாகராஜன் நன்றி கூறினார்.

# காரைக்கால் வட்டார அளவிலான கூட்டமைப்பு இணைந்து நடத்திய பாரம்பரிய உணவு திருவிழா

*காரைக்கால் , டிச.9-*

புதுச்சேரி அரசு ஊரக வளர்ச்சி துறை, புதுவை மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகம் ,காரைக்கால் வட்டார அளவிலான கூட்டமைப்பு இணைந்து நடத்திய பாரம்பரிய உணவு திருவிழா திருநள்ளாறு தேவஸ்தான வரிசை வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இவ்விழாவில் திருநள்ளாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர்.சிவா , தலைமை ஏற்று விழாவில் கலந்து கொண்டு உணவுத் திருவிழாவில் வெற்றி பெற்ற சுயஉதவிக் குழு மகளிர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி ( கோயில்கள்) அருணகிரிநாதன் துணை ஆட்சியர் செந்தில்நாதன், ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி இணை வட்டார வளர்ச்சி அலுவலர் அரங்கநாதன் மற்றும் மாரியப்பன், எஸ். பக்கிரிசாமி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்..



இவ்விழாவில் சிறு தானிய உணவுகள், முருங்கை கீரையிலான உணவு வகைகள், காய்கறி ஸாலட் வகைகள், மூலிகை சூப் வகைகள், மூலிகை குளிர்பானங்கள் ஆகியவை காட்சி படுத்தப்பட்டு இருந்தன. சிறந்த உணவிற்விற்கான பரிசினை காரைக்கால் அவ்வையார் மகளிர் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் நிதிகட்டியார் ,ரேகா , வண்டார்குழலி ஆகியோர் தேர்வு செய்து கொடுத்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கிராம சேவக், வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள், வட்டார அளவிலான கூட்டமைப்பின் மேலாளர், வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். இவ்விழாவில் 150-க்கும் மேற்பட்ட சுய உதவிக்குழ உறுப்பினர்கள் பங்கு பெற்றனர். விழா முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வட்டார மேலாளர் கே. சன்மதி நன்றி கூறினார்.

# மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 642 குடும்பங்களுக்கு கவரப்பேட்டையில் நிவாரண பொருட்களை அமைச்சர் காந்தி வழங்கினார்

ஊத்துக்கோட்டை,நவ9-

மிக்ஜாம் புயல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தமிழகத்தின் வடகிழக்கு பகுதியான திருவள்ளூர் மாவட்டம்,பழவேற்காடு, கும்மிடிப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளின் வழியாக ஆந்திர மாநிலத்தின் தென்கிழக்கு பகுதியான நெல்லூருக்கும்- மசூரிபட்டினத்துக்கும் இடையே திங்கட்கிழமை கரையை கடந்தது.



இந்நிலையில், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு சார்பில் அரிசி,மளிகை பொருட்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கும்மிடிபூண்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்முதலம்பேடு, மேல்முதலம்பேடு, கும்மிடிப்பூண்டி,புதுகும்மிடிப்பூண்டி,மாதர்பாக்கம், ஈகுவார்பாளையம், மாநெல்லூர்,நேமளூர் உள்ளிட்ட ஒன்பது கிராமங்களை சேர்ந்த 642 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி கவரப்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் பிரபு சங்கர் தலைமை தாங்கினார். திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கே.வி ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில்,சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில்,டி.ஜே.ஜி. தமிழரசன், கீழ்முதலம்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் நமச்சிவாயம்,நிர்வாகிகள் தொழில் அதிபர் நாகராஜ், நெல்வாய்மூர்த்தி, கவரப்பேட்டை திருமலை, ஒன்றிய குழு உறுப்பினர் ஜோதி,புலியூர் புருஷோத்தமன், திருஞானம், பிரசாத்,இஸ்மாயில்,கும்மிடிப்பூண்டி தாசில்தார் ப்ரீத்தி,வருவாய் ஆய்வாளர் பொன்னி,கிராம நிர்வாக அதிகாரிகள் ஜோதிபிரகாசம், திவ்யா, அருள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ தேசிய நுகர்வோர் தினத்தை முன்னிட்டு காரைக்கால் குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பில் காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் நுகர்வோர் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில நுகர்வோர் கூட்டமைப்பு தலைவர் திருமுருகன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் பாலாஜி தலைமை உரையாற்றினார்கள் மாவட்ட நுகர்வோர் குறை தீர்ப்பு மன்ற தலைவர் முத்துவேல் உறுப்பினர்கள் சுவிதா மற்றும் அமுதாஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு நுகர்வோர் குறைகளை எப்படி சரி செய்து கொள்வது எப்படி குறைதீர்ப்பு மன்றத்தை அணுகுவது என்பது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை மாணவிகளுக்கு புரியும் வகையில் விலக்கி எடுத்துக் கூறினார்கள். தொடர்ந்து காரைக்கால் மாவட்ட நுகர்வோர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் பாரிஸ் ரவி செயலாளர் அமுதா ஆறுமுகம் சிப்காட் மாநில செயலாளர் சிவக்குமார் நுகர்வோர் பெண்கள் கூட்டமைப்பு தலைவி சுமதி ஆகியோர் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வுகளை பல்வேறு கோணத்தில் பேசினார்கள் காரைக்கால் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அதிகாரி மகேஷ் நன்றி கூற கருத்தரங்கு நிகழ்ச்சி நிறைவுற்றது.



▶ காரைக்கால் மாவட்டத்தில் உள்ள திருநள்ளாரில் எதிர்வரும் சனிப்பெயர்ச்சி திருவிழாவை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பயணிக்கும் முதன்மை சாலைகளை மேம்படுத்தும் நோக்கில் காரைக்காலில் அமைந்துள்ள அனைத்து முதன்மைச் சாலைகளை செப்பனிட காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் அறிவுறுத்தலின் பேரிலும் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் சந்திரசேகரன் மற்றும் நிர்வாக பொறியாளர் சிதம்பரநாதன் உத்தரவின் பேரிலும் வாஞ்சூர் முதல் பூவம் வரை என் எச்-45 ஏ தேசிய நெடுஞ்சாலை செப்பனிடும் பணியினை நிரவி - திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் ஆய்வு மேற்கொண்டார், மேலும் சனி பெயர்ச்சி திருவிழா நெருங்குவதால் பணிகளை தரமாகவும் மேலும் விரைந்து முடிக்கும் படியும் பொதுப்பணித்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.



▶ அ தி மு க பொதுச்செயலாளர், முன்னாள் முதல்வர் எடப்பாடி கே பழனிசாமியின் அறிவுறுத்தலின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளரும், கட்சி அமைப்பு செயலாளருமான இராயபுரம் ஆர்.மனோ, பூத் கமிட்டி, இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை குழு, மகளிர் குழு அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவு செய்து பென்டிரைவின் பதிவிறக்கம் செய்து அ தி மு க தலைமை அலுவலக பொறுப்பாளர் மகாலிங்கத்திடம் வழங்கினார். கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.பாண்டியன் உடன் உள்ளார்



▶ வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் குமாரவேல் பாண்டியன்,பாலியல் குற்றங்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கான தனிப்பிரிவை அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மகப்பேறு பிரிவில் திறந்து வைத்தார். இந்நிகழ்வின் போது அரசு வேலூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் பாப்பத்தி, இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்)பால சந்திரன், கல்லூரி துணை முதல்வர் கௌரி வெளிகொண்டலா, மருத்துவ கண்காணிப்பாளர் ரதி திலகம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சஞ்ஜித், துணை இயக்குநர் (குடும்ப நலம்) மணிமேகலை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் வேதநாயகம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# 16 வது நிதி குழுவிலும் புதுச்சேரியை உறுப்பினராக சேர்க்க முயற்சிக்காதது ஏன்?

## புதுவை மாநிலம் இளைஞர் காங்கிரஸ், மாநில துணைத் தலைவர் கேள்வி?

புதுச்சேரி, டிச,9

இது குறித்து புதுவை மாநிலம் இளைஞர் காங்கிரஸ், மாநில துணைத் தலைவர் சமீர் அகமது, துணை நிலை ஆளுனருக்கு விடுத்துள்ள அறிக்கையில் கடந்த மாதம் 29ஆம் தேதி டில்கியில் நடைபெற்ற 16வது நிதிக்குழு கூட்டத்தில் புதுச்சேரி மாநிலம் ஏன் உறுப்பினராக சேர்க்கப்படவில்லை !இது புதுச்சேரி மாநிலத்தின் நிதி ஆதாரத்தை பாழ்படுத்தும் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை பலி கொடுக்கும் ஒரு செயல் ஆகும் 16வது நிதிக்குழுவில் உறுப்பினராக சேர்க்கும் முயற்சியை புதுச்சேரி துணைநிலை ஆளுநராக உள்ள தாங்கள் முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

அதனை செய்யாமலும் மக்கள் நலனில் அக்கறை இல்லாத தாங்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த விழாக்களில் முதன்மை விருந்தினராக தன்னை முன் நிறுத்த வேண்டும் என



தலைமைச் செயலாளர் மூலம் அனைத்து துறையினருக்கும் அரசாணை வெளியிட்டு அதன் மூலம் பிஜேபி பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள முயற்சிக்கும் உங்களின் செயல் புதுச்சேரி மக்களுக்கு செய்த மிகப்பெரிய துரோகசெயல் ஆகும்.

பதினாறாவது நிதிக்குழுவில் புதுச்சேரி யூனியன் பிரதேசம் உறுப்பினராக சேர்க்கப்பட்டிருந்தால் ஒன்றிய அரசிடமிருந்து பெறவேண்டிய நிதியை முறையாக பெறலாம், இரண்டாவதாக உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதால் உள்ளாட்சித் துறைகளுக்கு வரவேண்டிய நீதியும் தடைப்படும்.

யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீருக்கு பதினாறாவது நிதி குழுவில் உறுப்பினர் அந்தஸ்து கொடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் புதுச்சேரியை பிஜேபி ஒன்றிய அரசு புறக்கணித்து இருப்பது மிகப்பெரிய மக்கள் விரோத செயலாகும். இதனை எல்லாம் மறைத்துவிட்டு அரசு விழாக்களில் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ள துணைநிலை ஆளுநர் ஆன தங்களுக்கு என்ன தகுதி உள்ளது? புதுச்சேரி மக்கள் 2024ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் அதற்கான வெகுமதியை தங்களுக்கும் தங்களின் கட்சிக்கும் அளிப்பார்கள் என இளைஞர் காங்கிரஸ் எச்சரிக்கிறது என கட்டமாக தனது அறிக்கையில் இவ்வாறு தெரிவித்து உள்ளார். இளைஞர் காங்கிரஸ், மாநில துணைத் தலைவர் சமீர் அகமது,

### ஆரிக்கம்பட்டு கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில்

# ரூ.40 லட்சம் செலவில் கட்டப்பட்ட மேம்பாலம் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டது



பெரியபாளையம், டிச. 9-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், குருவாயல் ஊராட்சியை சேர்ந்து ஆரிக்கம்பட்டு கிராமம் ஆகும்.இக்கிராமத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது.எனவே, இக்கிராமத்தில் காய்கறிகள், கீரைகள்,பூக்கள் உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றது.

இவ்வாறு பயிரிடப்படும் பொருட்களை விவசாயிகளும், பொதுமக்களும் செங்குன்றம், சென்னை-கோயம்பேடு உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இக்கிராமத்தில் இருந்து பூச்சிஅத்திபேடு, செங்குன்றம், மாதவரம்,கோயம்பேடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் ரூ.40 லட்சம் செலவில் 20அடி அகலம்,50அடி நீளம் கொண்ட மேம்பாலம் ஒன்றை கட்டினர்.

இந்த மேம்பாலம் தரம் இல்லாமல் கட்டி முடிக்கப்பட்டதாக இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வந்தார்களாம். இந்நிலையில்,மிக்ஜாம் புயல் காரணமாக கடந்த சில நாட்களாக கன மழை பெய்தது. இதன் காரணமாக பூண்டி ஏரியின் உபரி நீர் கொசத்தலை ஆற்றில் திறந்து விடப்பட்டது. இந்த வெள்ளப்பெருக்கின் காரணமாக ஆரிக்கம்பட்டு கிராமத்தில் இருந்த மேம்பாலத்தின் ஒரு பகுதி வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டது.இதனால் இம்மேம்பாலத்தில் போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் தற்போது விவசாயிகளும்,பொதுமக்களும் பல கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு காரணிபேட்டை பஸ் நிறுத்தம் வழியாக பல்வேறு பகுதிகளுக்கு சென்று வரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. எனவே,பொதுமக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும்,தமிழக முதல்வரும் போர்க்கால அடிப்படையில் இப்பகுதியில் மீண்டும் ஒரு தரமான மேம்பாலத்தை கட்டித் தர வேண்டும்.இதன் அருகில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக தரம் உயர்த்தி தரவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீர்காழி பாமக நகர்மன்ற உறுப்பினர், அதிமுக பிரமுகர் மார்க்கோனி ஏற்பாட்டில் அதிமுகவில் இணைந்தார்

**மயிலாடுதுறை, டிச. 9-**

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட மதிமுக செயலாளராக பொறுப்பு வகித்த மார்க்கோனி கடந்த சில மாதங்களுக்கு முன்பு அதிமுகவில் பொதுச் செயலாளர் எடப்பாடி கே பழனிச்சாமி முன்னிலையில் இணைந்தார். அதனைத் தொடர்ந்து பல்வேறு கட்சியைச் சார்ந்த பிரமுகர்கள் மார்க்கோனி ஏற்பாட்டில் அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.



அதன் ஒரு பகுதியாக சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட பத்தாவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் சூரிய பிரபா வெற்றிச்செல்வன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் மயிலாடுதுறை மாவட்ட அதிமுக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ். பவுன்ராஜ் முன்னிலையில் தரங்கம்பாடி தாலுகா எடுத்துக்கட்டி சாத்தனூர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இதேபோல் பாமக நகர்மன்ற தலைவர் வேட்பாளர் கற்பகம் சுரேஷ், பாமக 22 ஆவது வார்டு செயலாளர் சாந்தகுமார், பாமக நகர மாணவரணி செயலாளர் பாபு, அம்மா மக்கள் முன்னேற்ற கழக இளைஞரணி செயலாளர் அஜித், பாமக 22 ஆவது வார்டு தலைவர் முத்துக்குமார் ஆகியோர் அதிமுகவில் இணைந்தனர். அதிமுக பிரமுகர் மார்க்கோனி ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கழகத்தில் இணைந்தவர்களை மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ் பவுன்ராஜ் அதிமுக சால்வை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

# காட்டுமன்னார்கோவிலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தெருமுனை கூட்டம்: சிந்தனைச் செல்வன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

*காட்டுமன்னார் கோவில், டிச.9-*

*திருச்சியில் வருகிற 23-ந்தேதி நடைபெறும் வெல்லும் ஜன நாயகம் மாநாட்டை விளக்கி மற் விடுதலை சிறுத்தைகள் கட்சி கடலூர் தெற்கு மாவட்டம் சார்பில் தெருமுனை கூட்டம் காட்டுமன்னார்கோவில் பஸ் நிலையம் முன்பு நடந்தது.இதற்கு மாவட்ட செயலாளர் எல். கே.மணவாளன் தலைமை தாங்கினார்.*



ஒன்றிய செயலாளர்கள் பரமேஸ்வரன், ராமலிங்கம், சங்கர், தொகுதி துணை செயலாளர் வெற்றிவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் நாகராஜ் வரவேற் றார். சிறப்பு அழைப்பாளராக மாநில பொதுச் செயலாளரும், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினருமான சிந்தனைச்செல்வன் கலந்து கொண்டு திருச்சியில் நடை பெறும் வெல்லும் ஜனநாயகம் மாநாட்டில் காட்டுமன்னார் கோவில், குமராட்சி பகுதியில் இருந்து விடுதலைசிறுத்தை கட்சியினர் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டும் என பேசினார்.

முன்னதாக அம்பேத்கர் நினைவு தினத் தையொட்டி, அவரது சிலைக்கு சிந்தனைச்செல்வன மாலை அணிவித்தார் . இதில் நிர்வாகிகள் ஜெயக்குமார், நகர பொருளாளர் கஸ் பாபாலா, ஆற்றல் அரசு மதிவாணன், ரவிச்சந்திரன், ஜெய்சன், ராஜா உள்பட பலர் கலந்துக் கொண்டனர். முடிவில் நகர செயலாளர் திரு நாவுக்கரசு நன்றி கூறினார்.

# தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் பள்ளியில் தேர்வை கொண்டாடுவோம் நிகழ்ச்சி



தென்காசி,டிச.9–

தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் சிபிஎஸ்சி பள்ளியில் தேர்வை கொண்டாடுவோம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திரைப்பட நடிகர் தாமு கலந்துகொண்டார், மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும், அறிவு திறனை வளர்க்கவும், தேர்வு குறித்த பயத்தை போக்கவும், மாணவர்கள் தங்கள் மனதில் உள்ள வேண்டாத எண்ணங்களை தவிர்த்து பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மதிக்கத்தக்க கருத்துக்களையும் வலியுறுத்தி, அறிவியல் விஞ்ஞானியும், முன்னாள் குடியரசு தலைவருமான ஏபிஜே அப்துல் கலாமின் கருத்துக்களை உலகெங்கும் பரப்பி வரும் திரைப்பட காமெடி நடிகரான தாமு தேர்வை கொண்டாடுவோம் என்னும் தலைப்பில் சுமார் மூன்று மணி நேரம் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள், கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் முதல்வர் மோனிகா டிசோசா தலைமை வகித்தார், நிகழ்ச்சி ஏற்பாடுகளை துணை முதல்வர் ஜெய பாக்கியா, ஒருங்கிணைப்பாளர் அருளானந்த், ஆண்டனி பிரசாத், மேபல், பாலமுருகன், மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், ஆகியோர் செய்திருந்தனர்.

# கீரமங்கலம் மதுக்கூடத்தில் தகராறு: 2 பேர் படுகாயம்

ஆலங்குடி, டிச.09–

ஆலங்குடி அருகே கீரமங்கலத்தில் இரவு மதுக்கூடத்தில் ஏற்பட்ட தகராறில் இருவர் படுகாயமடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீரமங்கலம் பேருந்து நிலையம் பகுதியில் உள்ள டாஸ்மாக் மதுக்கடை அருகேயுள்ள மதுக்கூடத்தில் மது அருந்த வரும் நெய்வத்தளி கிராமத்தைச் சேர்ந்த முத்துமாணிக்கம் மகன் செந்தில் (35) கடந்த சில தினங்களாக கத்தியைக்காட்டி மதுக்கூட ஊழியர்களுடன் தகராறில் ஈடுபட்டு வந்தாராம்.

இதே போல, சம்பவத்தன்று மது அருந்திய செந்தில் மதுக்கடை ஊழியரான வடகாட்டைச் சேர்ந்த தர்மலிங்கம் மகன் சுதாகர் (எ) கணேசன் (32) என்பவரை கத்தியால் குத்தியுள்ளார். இதில், செந்தில் பலத்த காயமடைந்தார். இதைப்பார்த்த மதுக்கடை ஊழியர்கள் செந்திலை தாக்கியுள்ளனர். இதில், அவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. இருவரையும் அருகில் இருந்தவர்கள் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், இதுகுறித்து கீரமங்கலம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைப்பு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் அறிவிப்பு

திருச்சி : டிச. 9, மழை வெள்ளம் மற்றும் நிர்வாக காரணங்களை முன்னிட்டு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தை சுற்றியுள்ள 9 மாவட்டங்களில் 130-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இயங்கி வருகின்றன. டெல்டா மாவட்டங்களான தஞ்சை, மயிலாடுதுறை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பல மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகம் பேருதவியாக இருக்கிறது.



அப்பகுதியிலுள்ள கடைகோடி கிராமத்தைச் சேர்ந்த பலரின் குடும்பத்திலும் முதல் பட்டதாரிகள் உருவாவதற்கு இப்பல்கலைக்கழகம் முக்கிய காரணியாக உள்ளது. இந்த பல்கலைக்கழகம் சார்பில் நடத்தப்படும் செமஸ்டர் தேர்வுக்கான தேதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்தது. மாணவர்களும் தயாராக இருந்தனர்.

இந்த நிலையில், சென்னை உள்பட பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளம், அதன் காரணமாக பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளதால், தற்போது நடைபெறுவதாக இருந்த செமஸ்டர் தேர்வுகள் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

திருச்சி பாரதிதாசன் பல்கலை மற்றும் அதன் கீழ் உள்ள உறுப்பு கல்லூரிகளில் வரும் 11ம் தேதி முதல் 16ம் தேதி வரை அறிவிக்கப்பட்ட செமஸ்டர் தேர்வுகள் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப் பட்டுள்ளது. தேர்வு அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும் என பல்கலைக்கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# நீட் எதிர்ப்பு கையெழுத்து அட்டைகளை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் வழங்கல்



சங்கரன்கோவில், டிச.9–

மாணவ, மாணவிகளின் மருத்துவ கனவை சிதைக்கும் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை திமுக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த செப்டம்பர் மாதம் சென்னையில் தொடங்கி வைத்தார். இந்நிலையில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் பல்வேறு 2 சட்டமன்ற தொகுதிகளில் நீட் தேர்வுக்கு கையெழுத்துப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து இயக்க அட்டைகளை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.எம். எஸ் முகேஷ் தலைமை வகித்தார், தலைமை செயற்குழு உறுப்பினர் யூ எஸ் டி சீனிவாசன், மாவட்ட பொருளாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், தொடர்ந்து வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நீட் தேர்வு எதிர்ப்பு இயக்க கையெழுத்து அட்டைகளை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் வழங்கினர். மேலும் ஆன்லைன் மூலம் நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்துகள் தென்காசி வடக்கு மாவட்டத்தில் 53 ஆயிரம் நபர்களிடம் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். நிகழ்வின் போது மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, ராஜ், ராஜராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# செந்துறை அருகே பாரதியார் பிறந்தநாள் விழா



அரியலூர், டிச.9–

செந்துறை அருகே பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது இது பற்றி துளார் கிராமத்தில் உள்ள கலைமகள் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் சரவணன் வெளியிட்ட செய்தி குறிப்பு அரியலூர் மாவட்டம் , செந்துறை தாலுக்கா, துளார் கிராமத்தில் உள்ள கலைமகள் மேல்நிலைப்பள்ளியில், மகாகவி பாரதியார் 121 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி மாணவ, மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை, ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தி, பரிசுகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் கலைமகள் பள்ளி இயக்குனர் சுகுணா தலைமை தாங்கினார், பள்ளி தலைமையாசிரியர் உலகநாதன் முன்னிலை வகித்தார், விழாவில் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவ மாணவிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஸ்ரீ ஐயப்பன் ஆலய 24 ஆம் ஆண்டு திருவீதி உலா நடைபெற்றது, இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஷேக் அப்துல் காதர் தலைமையில் மனித உரிமைகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர், இந் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் செல்வகுமார், அலுவலக மேலாளர் ஹரிஹரன், அருணாசலம், தனி வட்டாட்சியர் ஹென்றி பீட்டர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# ம.பி., சத்தீஸ்கர், ராஜஸ்தான் புதிய முதல்வர்கள் தேர்வு மத்திய பார்வையாளர்களை அறிவித்தது பாஜக

புதுடெல்லி : டிச. 9, மத்தியப் பிரதேசம், ராஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களுக்கான புதிய முதல்வர்களைத் தேர்வு செய்வதற்கான மத்திய பார்வையாளர்கள் குழுக்களை பாஜக நேற்று அறிவித்துள்ளது.

இதன்படி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வினோத் தவாடே மற்றும் சரோஜ் பாண்டே ஆகியோர் ராஜஸ்தான் மாநிலத்துக்கான பார்வையாளர் களாகவும், ஹரியாணா முதல்வர் மனோகர் லால் கத்தார், கே. லக்ஷ்மன் மற்றும் ஆஷா லக்ரா ஆகியோர் மத்தியப் பிரதேசத்துக்கான பார்வையாளர் களாகவும், மத்திய அமைச்சர்கள் அர்ஜுன் முண்டா, சர்பானந்த சோனோவால் மற்றும் துஷ்யந்த கவுதம் ஆகியோர் சத்தீஸ்கர் மாநிலப் பார்வையாளர் களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கூறுகையில், "பார்வையாளர்கள் அவர்களுக்கான மாநிலங்களுக்கு பயணம் செய்து மாநிலத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள எம்எல்ஏக்களின் கூட்டங்களை மேற்பார்வை யிடுவார்கள். யார் புதிய முதல்வர் என்பது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. மூன்று மாநில முதல்வர்களைத் தேர்ந்தெடுப்பதில் கட்சி, சமூக, பிராந்திய, நிர்வாக மற்றும் நிறுவன நலன்களைக் கவனத்தில் கொள்கிறது" என்று தெரிவித்தார்.

இதனிடையே, மூன்று மாநிலங்களைச் சேர்ந்த



தலைவர்களும் அமித்ஷா, பாஜக தலைவர் ஜெ.பி. நட்டா உள்ளிட்ட கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் சந்தித்து வருகின்றனர். என்றாலும் இந்தச் சந்திப்பின் முக்கியத்துவத்தை மட்டுப்படுத்தும் விதமாக இது வழக்கமான சந்திப்புதான் எனத் தகவல் அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

முன்னதாக, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசத்தில் பாஜக வெற்றி பெற்றதையடுத்து அக்கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் கடந்த 5-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி இல்லத்தில் நடைபெற்றது. இதில் பாஜக தலைவர் ஜெ.பி.நட்டா உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் 3 மாநிலங்களிலும் யார் யாரை முதல்வர்களாக தேர்வு செய்வது என்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் இது குறித்து எந்த விவரமும் வெளியிடப்படவில்லை. பாஜக ஆட்சிமன்றக் குழு கூட்டத்தை எப்போது நடத்துவது என்பதை தீர்மானிப்பதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆட்சிமன்ற குழு கூட்டத்தில், 3 மாநிலங்களின் சட்டப்பேரவை கட்சி கூட்டங்களுக்கு மேலிடப் பார்வையாளர்களை நியமிப்பது குறித்து முடிவு செய்யப்படும் எனக் கூறப்பட்டது.

## அறந்தாங்கி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து

# ரூ.3 லட்சம் மதிப்பிலான மிக்ஜாம் புயல் – நிவாரண பொருட்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டது



அறந்தாங்கி,டிச.9–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் சார்பில் சென்னை மாநகரில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அறந்தாங்கி வர்த்தக சங்கம், நகர மருந்து வணிகர்கள் சங்கம், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்களிடம் இருந்து அரிசி, கோதுமை, பிரட் பிஸ்கட், ரவா, பால்மாவு, தண்ணீர்பாட்டில், குளியல் சோப், ஜவுளி துணிகள், அத்தியவாசிய மருந்து பொருட்கள், போர்வை உள்ளிட்ட சுமார் ரூ 3.லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் அறந்தாங்கி வட்டாட்சியர் ஜபருல்லா தலைமையில் பெறப்பட்டு நேற்று மாவட்ட ஆட்சியருக்கு வாகனம் மூலம் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது.

வருவாய் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் அலுவலகத்திலிருந்து பொருட்களை தூக்கி வந்து வேனில் ஏற்றி அனுப்பிய நிகழ்வு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

நிகழ்ச்சியில் வர்த்தக சங்க நிர்வாகிகள், பல்வேறு அமைப்பு நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மிக்ஜாம் புயல் எதிரொலி : சேலம் திமுக இளைஞரணி மாநாடு தேதி மாற்றம்



சென்னை, டிச. 9–

திமுகவின் இளைஞரணி மாநாடு வரும் 17-ம் தேதி சேலத்தில் நடைபெறவிருந்த நிலையில், மிக்ஜாம் புயல் நிவாரண பணிகள் நடைபெற்று வருவதால் டிசம்பர் 24-ம் தேதிக்கு மாநாடு மாற்றப்பட்டுள்ளதாக திமுக தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

திமுக இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு அந்த அணியை இன்னும் அடுத்தக்கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில், டிசம்பர் 17-ம் தேதி சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள பெத்தநாயக்கன் பாளையத்தில் திமுக இளைஞரணியின் 2-வது மாநில மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 100 ஏக்கர் பரப்பளவிலான திடல் தயாராகி வருகிறது.

இந்த மாநாட்டை அனைத்து தரப்பு மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக வாகன பேரணிகளை அமைச்சர் உதயநிதி தொடங்கி வைத்தார். இந்த நிலையில், மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த கனமழையில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்கள் பெரும் பாதிப்ப சந்தித்துள்ளன. இந்த நிலையில், அங்கு நிவாரணப் பணிகளில் அமைச்சர்கள் உள்ளிட்ட திமுகவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரவு பகலாக மீட்புப்பணிகளில் உதயநிதி உள்ளிட்ட அமைச்சர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் வரும் 17-ம் தேதி நடைபெற இருந்த இளைஞரணி மாநாடு தேதி மாற்றம் செய்யப்படுவதாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மிக்ஜாம் புயலால் பெய்த பெருமழை - வெள்ளம் காரணமாக, சில மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி, மழை - வெள்ள நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதால், 17-12-2023 அன்று சேலத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு தேதி மாற்றப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக 24-12-2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாநாடு நடைபெறும்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சி கொள்ளிடம் ஆற்றில் பாய்ந்த கார் கேரள தம்பதி உயிரிழப்பு



திருச்சி : டிச. 9–

திருச்சி கொள்ளிடம் ஆற்றுபாலத்தைஉடைத்து கார் கீழே விழுந்து விபத்திற்குள்ளானதில் 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில், ஸ்ரீரங்கம் - சமயபுரம் டோல்கேட் பகுதியை இணைக்கும் பழைய கொள்ளிடம் ஆற்றுப்பாலத்தை கடக்கும் போது தடுப்பு சுவரை உடைத்துக்கொண்டு கார் ஒன்று நேற்று காலை கீழே விழுந்துள்ளது. பாலத்தின் 19வது மதகு அருகே தடுப்புக்கட்டையை உடைத்துக் கொண்டு ஆற்றுக்குள் கார் கவிழ்ந்துள்ளது. சுமார் 50 அடி உயரத்தில் இருந்து விழுந்ததில் காரானது அப்பளம் போல் நொறுங்கியது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த கேரளாவை சேர்ந்த கணவன், மனைவி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த கார் சென்னையை நோக்கி சென்றதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து காரை மீட்கும் முயற்சியில் காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்த கணவன், மனைவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர். மேலும் காரில் உள்ள பொருட்களை ஆய்வு செய்து இந்த தம்பதி எந்த பகுதியை சேர்ந்தவர்கள் என்ற விசாரணையை காவல்துறையினர் தொடங்கியுள்ளனர். நேற்று காலையிலேயே ஏற்பட்ட இந்த விபத்தின் காரணமாக திருச்சி- சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

# அரியலூர் விஜய் மக்கள் இயக்கம் சார்பாக நிவாரண பொருட்கள் வழங்கல்





அரியலூர்,டிச.9–

புயல் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட சென்னை நகர மக்களுக்கு வழங்கும் வகையில் அரியலூர் விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டு சென்னை மாநகரின் வசிக்கும் பொது மக்களுக்கு உதவும் வகையில் பிஸ்கட், பிரட், குழந்தைகளுக்கான பால்பவுடர் மெழுகுவர்த்தி மற்றும் குடிநீர் பாட்டில் உள்ளிட்ட, அத்தியாவசிய பொருள்களை, விஜய் மக்கள் இயக்கத்தின் அரியலூர் மாவட்டத் தலைவர் சிவா தலைமையில், ஹரிகிருஷ்ணன் முன்னிலையில், சுரேந்தர், மிதுன், பிரேம், பிரவீன், கிஷோர், சரவணா உள்ளிட்டோர், அரியலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி வரலட்சுமியிடம் வழங்கினர், இந்நிகழ்வில் அரியலூர் அகிலம் டிரஸ்ட் நிறுவனர் சோபனா, ஹரி உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# இந்திய வீரர்களின் பந்துவீச்சு சுமார்தான் தென்ஆப்பிரிக்காவை வெல்வது கடினம்

## ஆகாஷ்சோப்ரா கருத்து



**டர்பன் : டிச. 9,**

**தென்ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டி20, 3 ஒரு நாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.**

முதலில் டி20 தொடர் நடைபெறுகிறது. இந்த போட்டிவரும் 10ம்தேதி முதல் தொடங்குகிறது. சமீபத்தில் ஆஸ்திரேலியாவை 4-1 என்ற கணக்கில் இந்திய அணி வீழ்த்தி டி20 தொடரை கைப்பற்றியது. இந்த நிலையில் கிட்டத்தட்ட அதே அணி சூர்யகுமார் தலைமையில் தென் ஆப்பிரிக்காவை எதிர்கொள்கிறது. இதுகுறித்து ஆகாஷ் சோப்ரா கூறியதாவது:-

பும்ராவைத் தவிர தற்போது இந்திய அணியில் இறுதிக்கட்டத்தில் பந்து வீசக்கூடிய தகுதியான வீரர்கள் இல்லை. இது டி20 உலக கோப்பையில் பெரிய ஆபத்தை ஏற்படுத்தலாம். இறுதிகட்ட ஓவரை வீசக்கூடிய வீரர் யார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். பெரும்பான்மையான போட்டிகள் பகலில் தான் நடைபெறும். அப்போது பந்து ரிவர்ஸ் ஸ்விங் ஆவது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அர்ஸ்தீப் சிங் அவ்வளவு ஒன்றும் சிறப்பாக செயல்படவில்லை.

ஒரு போட்டியில் அவர் கடைசி ஓவர் சிறப்பாக வீசினார். ஆனால் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்னால் அவர் எப்படி பந்து வீசினாரோ அதேபோல் தற்போது செயல்படவில்லை. இதேபோன்றுதான் ஆவேஷ்கான், முகேஷ் குமார் ஆகியோர் எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக இறுதி கட்ட ஓவரை யார் வீசுவது என்பது பெரிய கவலையை இந்தியாவுக்கு கொடுக்கும். டி20 உலக கோப்பையை வெல்ல வேண்டும் என்றால் நிச்சயம் இதில் இந்தியா கவனம் செலுத்தி அதற்கான விடையை கண்டுபிடிக்க வேண்டும். டி20 உலக கோப்பையை கண்டிப்பாக வெல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

ஆனால் அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். தென்ஆப்பிரிக்கா தொடரில் இந்தியா மூன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் எல்லாம் வெற்றி பெறாது. அப்படி வெல்ல வேண்டுமென்றால் அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். தென் ஆப்பிரிக்கா அணி ஒருநாள் மற்றும் டி20-ல் அவ்வளவு சிறப்பாக செயல்படவில்லை. நடந்து முடிந்த உலக கோப்பையிலும் அவர்கள் பிரமாதமான ஆட்டத்தை எல்லாம் வெளிப்படுத்தவில்லை. எனினும் தற்போது சொந்த மண்ணில் விளையாடுவதால் தென்னாப்பிரிக்க அணி வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நான் சொல்வது தவறாக போய் கூட முடியும். அப்படி ஆக வேண்டும் என்று தான் நான் நினைக்கிறேன். இந்த தொடரில் மொத்தம் 8 போட்டிகள் நடைபெறுகிறது. இதில் 5 தென்னாப்பிரிக்காவும் 3 இந்தியாவும் ஜெயிக்க வாய்ப்பு உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

# என்னுடைய டென்னிஸ் வாழ்க்கையில் 2024 கடைசி ஆண்டாக இருக்கலாம் – ரபேல் நடால்



**மாட்ரிட் : டிச. 9,**

**கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் ஏற்பட்ட காயம் இன்னும் முழுமையாக குணமாகவில்லை.**

22 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினை சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் ஏறக்குறைய 1 ஆண்டுக்கு பின் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்ப உள்ளார். காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற எந்த வித டென்னிஸ் தொடரிலும் பங்கேற்காத நிலையில், குணமடைந்த பிறகு மீண்டும் களத்திற்கு திரும்ப உள்ளார்.

அதன்படி நடால் டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார். இந்நிலையில் 2024ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரிலும், மற்ற தொடர்களிலும் விளையாடுவதுதான் அவரது டென்னிஸ் வாழ்க்கையில் இறுதி ஆண்டாக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், 'கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் ஏற்பட்ட காயம் இன்னும் முழுமையாக குணமாகவில்லை. அதனை சரி செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்திற்கும் எனது உடல் முழுமையாக ஒத்துழைக்கவில்லை. மேலும் டென்னிஸ் வாழ்க்கையில் 2024 தனது இறுதி ஆண்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இது நான் எடுக்கும் முடிவு அல்ல, என் உடல் எடுக்கும் முடிவு' என்று கூறினார். இவரது இந்த அறிவிப்பு அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

# இன்னும் 2 தான் : கோலியின் ஆல்டைம் சாதனையை முறியடிக்க இருக்கும் சிக்கந்தர் ராசா





**ஹராரே : டிச. 9,**

**அயர்லாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலாவது டி20 போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.**

இந்த போட்டியில் முதலில் பேட்டிங் ஆடிய அயர்லாந்து அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 147 ரன்கள் எடுத்தது. அயர்லாந்து தரப்பில் பால்பிர்னி 32 ரன்னும், டெலனி 26 ரன்னும் எடுத்தனர். ஜிம்பாப்வே தரப்பில் ராசா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்து 148 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜிம்பாப்வே அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 148 ரன்கள் எடுத்து கடைசி பந்தில் திரில் வெற்றி பெற்றது. ஜிம்பாப்வே தரப்பில் சிக்கந்தர் ராசா 65 ரன்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 1-0 என ஜிம்பாப்வே அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்த போட்டியில் பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சிறப்பாக செயல்பட்ட சிக்கந்தர் ராசா ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் 14-வது ஆட்ட நாயகன் விருதை இவர் பெற்ற முகமது நபியை (14) சமன் செய்துள்ளார். டி20 கிரிக்கெட்டில் அதிக ஆட்டநாயகன் விருதை விராட் கோலி பெற்றுள்ளார். அவர் 15 முறை பெற்றுள்ள நிலையில் அவரின் சாதனையை முறியடிக்க இன்னும் 2 முறை ஆட்டநாயகன் விருதை ராசா பெற வேண்டும். இவர்களை அடுத்து சூர்யகுமார் யாதவ் 13 முறையும் ரோகித் சர்மா 12 முறையும் ஆட்டநாயகன் விருதை பெற்றுள்ளனர்.

நடப்பு ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டில் அதிகமுறை ஆட்ட நாயகன் விருது வென்ற (6) விராட் கோலியை ஏற்கனவே சிகந்தர் ராசா (7) பின்னுக்கு தள்ளியது குறிப்பிடத்தக்கது.

### இனவெறி சர்ச்சை

# பாகிஸ்தானிடம் மன்னிப்பு கேட்ட ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம்



CRICKET AUSTRALIA

**கான்பெர்ரா : டிச. 9,**

**ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.**

முதலாவது டெஸ்ட் வருகிற 14-ந்தேதி பெர்த்தில் தொடங்குகிறது. அதற்கு முன்பாக ஆஸ்திரேலிய பிரதமர் லெவன் அணிக்கு எதிராக 4 நாள் பயிற்சி ஆட்டத்தில் ஆடுகிறது. இந்த பயிற்சி ஆட்டம் புதன்கிழமை கான்பெர்ராவில் தொடங்கியது.

இதில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 9 விக்கெட்டுக்கு 391 ரன்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. கேப்டன் ஷான் மசூத் இரட்டை சதம் (201 ரன்) அடித்து களத்தில் இருந்தார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய பிரதமர் லெவன் அணி 2-வது நாள் முடிவில் 2 விக்கெட்டுக்கு 149 ரன்கள் எடுத்தது.

இதற்கிடையே, இந்த ஆட்டத்தின் போது இனவெறி சர்ச்சை வெடித்தது. மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த ஸ்கோர் போர்டில் பாகிஸ்தானுக்கு பதிலாக பாகி (பி.ஏ.கே.ஐ.) என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக குறிப்பிட்டு இருந்தனர். 'பாகி' என்பது பாகிஸ்தான் அல்லது தெற்காசியாவில் பிறந்தவரை குறிப்பிடும் இழிசொல்லாக கருதப்படுகிறது.

இதுசமூகவலைதளத்தில் வைரலானதும் அந்த வார்த்தை திருத்திக் கொள்ளப்பட்டதுடன், தவறுக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் மன்னிப்பு கோரியது.

வரலாறு சினிமா

# "சூர்யா ஓர் அற்புதமான நடிகர்" 'கங்குவா' அனுபவம் பகிரும் பாலிவுட் நடிகர் பாபி தியோல்





**சென்னை : டிச. 9,**

**"சூர்யா ஓர் அற்புதமான நடிகர்" என 'கங்குவா' படத்தில் நடித்து வரும் பாலிவுட் நடிகர் பாபி தியோல் தனது அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.**

பாலிவுட்டின் முன்னணி நடிகர் பாபி தியோல். ரன்பீர் கபூர் நடிப்பில் திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் 'அனிமல்' படத்தில் பாபி தியோலின் வில்லன் கதாபாத்திரம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. சன்னி தியோல் அடுத்ததாக சூர்யாவின் 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். இந்த தகவலை அவரே சமீபத்திய நேர்காணலில் தெரிவித்துள்ளார். அதில் அவர், "சூர்யா ஓர் அற்புதமான அர்ப்பணிப்புள்ள நடிகர். அவருடன் பணியாற்றுவது சிறப்பான அனுபவம்.

கங்குவா படத்தில் நான் நடித்து வரும் கதாபாத்திரம் என்னுடைய வழக்கமான கதாபாத்திரத்திலிருந்து வேறுபட்டது. எனக்கு தமிழ் தெரியாது. அதனால்தான் சொல்கிறேன், இது எனக்கு முற்றிலும் மாறுபட்ட அனுபவம். என்னால் ஓரிரெண்டு மாதங்களில் தமிழை கற்றுக்கொள்ள முடியவில்லை. இயக்குநர் சிவா பழகுவதற்கு இனிமையானவர்" என்றார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படம், 'கங்குவா'. இதில் திஷா பதானி, யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உட்படப் பலர் நடிக்கின்றனர். பீரியட் படமான இதை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் யுவி கிரியேஷன்ஸ் உடன் இணைந்து தயாரிக்கிறது. வெற்றி பழனிசாமி ஒளிப்பதிவு செய்கிறார். தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டியில் உருவாகும் இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது.

# திருச்சிற்றம்பலம் போல் ஒரு படம் – மாதவனின் ஆசையை நிறைவேற்றிய மித்ரன் ஆர்.ஜவஹர்





**சென்னை : டிச. 9,**

**திருச்சிற்றம்பலம் வெற்றிப் படத்தை இயக்கிய மித்ரன் ஆர்.ஜவஹரின் புதிய படத்தில் ராதிகாவின் மகனாக மாதவன் நடிக்கிறார்.**

செல்வராகவனின் உதவி இயக்குநராக இருந்து யாரடி நீ மோகினி படத்தின் மூலம் இயக்குநரானவர் மித்ரன் ஆர்.ஜவஹர். அவர் இயக்குநராக அறிமுகமான யாரடி நீ மோகினி, தெலுங்கில் செல்வராகவன் இயக்கிய ஆடவரி மாட்லகு அத்தலே வேறுல படத்தின் ரீமேக். அடுத்து இயக்கிய குட்டி, உத்மபுத்திரன், மீண்டும் ஒரு காதல் கதை ஆகியவையும் ரீமேக் படங்களே. முதலிரண்டும் தெலுங்கு ரீமேக், மூன்றாவது மலையாள ரீமேக். அடுத்து மதில் என்ற படத்தை ஸீ 5 ஓடிடி தளத்துக்காக இயக்கினார்.

ரீமேக் அல்லாமல் மித்ரன் சொந்தமாக எழுதி, இயக்கி, திரையரங்கில் வெளியான முதல் படம் தனுஷ் நடித்த திருச்சிற்றம்பலம். முன்னணி நாயகர்கள் அரிவாளும், மிஷின் கன்னுமாக ரத்தவெறியுடன் அலைகையில் ஃபீல்குட் திரைப்படமாக திருச்சிற்றம்பலம் வெளியானது. தனுஷ், நித்யா மேனன், பிரகாஷ்ராஜ் ஆகியோரின் நடிப்பும், அவர்களின் கதாபாத்திர வடிவமைப்பும், காட்சிகளும் உறுத்தாமல் பார்வையாளர்களின் மனங்களுடன் கலந்தன. படம் உலக அளவில் 100 கோடிகளைத் தாண்டி வசூலித்தது.

திருச்சிற்றம்பலம் படத்தைப் பார்த்த நடிகர் மாதவன் போன் செய்து மித்ரனை பாராட்டியதோடு, இதேபோல் குடும்பப்பாங்கான கதையை தயார் செய்யுங்கள், நான் நடிக்கிறேன் என்றிருக்கிறார். அதன்படி புதிய கதையொன்றை மித்ரன் எழுதியுள்ளார். இதில் மாதவன் பிரதான வேடத்தில் நடிக்க, அவரது அம்மாவாக ராதிகா நடிக்கிறார். சில தினங்கள் முன்பு இதன் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. புயல், மழை காரணமாக நின்று போன படப்பிடிப்பு அடுத்த வாரம் மீண்டும் தொடங்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாட்டுப்பற்றும், நாயக பிம்பமும் ஹிர்த்திக் ரோஷனின் 'ஃபைட்டர்' டீசர்



**சென்னை : டிச. 9,**

**ஹிர்த்திக் ரோஷன் நடித்துள்ள 'ஃபைட்டர்' பாலிவுட் படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.**

தமிழிலிருந்து ரீமேக் செய்யப்பட்டு இந்தியில் வெளியான 'விக்ரம் வேதா' படத்துக்குப் பிறகு நடிகர் ஹிர்த்திக் ரோஷன் நடிப்பில் வெளியாக உள்ள திரைப்படம் 'ஃபைட்டர்'. 'வார்', 'பதான்' படங்களை இயக்கிய சித்தார்த் ஆனந்த் இந்தப் படத்தை இயக்குகிறார். தீபிகா படுகோன், அனில்கபூர் உள்ளிட்ட பலர் நடிக்கும் இப்படத்தை விஷால் சேகர் இசையமைக்கிறார். ரூ.250 கோடிக்கும் அதிகமான பட்ஜெட்டில் உருவாகும் இப்படம் ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

நாட்டுப்பற்று படங்கள் இன்னும் பாலிவுட்டில் உயிருடன் இருக்கின்றன. அந்த வகையில் 'ஃபைட்டர்' நாட்டுப்பற்றுடன் விமானப்படை வீரர்களின் சாகசங்களை வைத்து புதுவித திரைக்கதையாக உருவாகியிருப்பதை டீசர் உணர்த்துகிறது. எந்த வசனமும் இல்லாமல் வெறும் காட்சிகளாக நகரும் டீசரில், முழுக்க விமானப்படை சாகசங்களும், ஹீரோயிசமும், தேசியக்கொடியும் தான் வந்து செல்கின்றன.

படத்தின் தன்மையை உணர்த்த ஜனவரி 25-ம் தேதி, அதாவது குடியரசு தினத்துக்கு முந்தைய நாள் படம் வெளியாகிறது. இந்த ஆண்டு ஜனவரி 25-ம் தேதி ஷாருக்கானின் 'பதான்' படத்தை இதே இயக்குநர்தான் இயக்கியிருந்தார். தற்போது அதே நாட்டுப்பற்றை வைத்துக்கொண்டு ஹீரோவை மட்டும் மாற்றி 'ஃபைட்டர்' என புதிய படத்தை இயக்கியிருக்கிறார்.

# "பெண்கள் மீதான வெறுப்பை நியாயப்படுத்துவது வெட்கக்கேடு" 'அனிமல்' படம் குறித்து காங். எம்.பி காட்டம்





**புதுடெல்லி : டிச. 9,**

**"சினிமாவில் பெண்கள் மீதான வெறுப்பு மற்றும் வன்முறையை நியாயப்படுத்துவது வெட்கக்கேடானது" என காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் ரஞ்சீத் ரஞ்சன் குற்றம்சாட்டியுள்ளார்.**

ரன்பீர் கபூர் நடிப்பில் வெளியாகி திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கும் 'அனிமல்' படம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய அவர், "சினிமா சமூகத்தின் கண்ணாடி. நாம் எல்லோரும் சினிமாவை பார்த்து வளர்ந்தவர்கள். திரைப்படங்கள் இளைஞர்களிடையே தாக்கத்தை செலுத்தும் வல்லமை படைத்தவை. 'கபீர் சிங்', 'புஷ்பா' போன்ற படங்களின் வரிசையில் தற்போது 'அனிமல்' படம் வெளியாகியிருக்கிறது. என்னுடைய மகள், அவரது நண்பர்களுடன் சேர்ந்து 'அனிமல்' படத்தைப் பார்க்க சென்றிருந்தார். அவரால் அழுகையை கட்டுப்படுத்த முடியாததால் படத்திலிருந்து பாதியிலேயே வெளியேறிவிட்டார். சினிமாவில் பெண்கள் மீதான வெறுப்பு மற்றும் வன்முறையை நியாயப்படுத்துவது வெட்கக்கேடானது.

'கபீர் சிங்' படத்தில் அவர் தனது மனைவியையும், சமூகத்தையும், மற்றவர்களையும் எப்படி நடத்துகிறார் என பாருங்கள். அதேபோல மோசமான பெண் வெறுப்பை கொண்டதுதான் 'அனிமல்' படமும். இப்படியான செயல்களை படங்கள் நியாயப்படுத்துவதுதான் கவலைக்குரிய விஷயம். பெண்களுக்கு எதிரான வன்முறையை இயல்பாக்கம் செய்யும் படங்கள் சமூகத்தின் பொதுபுத்தியில் தாக்கம் செலுத்துகின்றன.

குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் சமூக மாற்றங்களில் பங்களிப்பைச் செலுத்தும் இதுபோன்ற சினிமாக்கள் இயக்குநர்களின் பொறுப்பு குறித்தும், அதனை முறைப்படுத்தும் அமைப்புகளின் பங்கு குறித்தும் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன" என்றார். மேலும், சமூகத்துக்கு நோயாக விளங்கும் இதுபோன்ற திரைப்படங்களை தணிக்கை வாரியம் எவ்வாறு அனுமதித்தது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

படத்தில் வரும் 'அர்ஜன் வைலி' என்ற பாடலையும் அவர் விமர்சித்தார். பஞ்சாப்பின் போர் கீதமான இந்தப் பாடல் 'அனிமல்' படத்தில் ரன்பீர் கபூர் கொலைவெறியுடன் தாக்குதல் நடத்தும்போது ஒலிக்கப்படுவதற்கு ரஞ்சீத் ரஞ்சன் கண்டனம் தெரிவித்துள்ளார். "முகலாயர்களுக்கு எதிராகவும், ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் போரிட்ட சீக்கியப் படையின் தலைமைத் தளபதி ஹரி சிங் நல்வாவின் மகன் அர்ஜன் சிங் நல்வா. சீக்கியர்களின் வரலாற்று பாடலை படத்தில் வரும் கும்பல் சண்டையின் பின்னணியில் பயன்படுத்தியிருப்பது மத உணர்வுகளை புண்படுத்தும் செயல்" என தெரிவித்துள்ளார்.

# நடிகர் ராம் சரணை சந்தித்த நெட்ஃப்ளிக்ஸ் சிஇஓ



**ஹைதராபாத் : டிச. 9,**

**நடிகர்கள் ராம் சரண் மற்றும் அவரது குடும்பத்தை நெட்ஃப்ளிக்ஸ் தலைமை செயல் அதிகாரி சந்தித்துள்ள புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி உள்ளது.**

தெலுங்கில் சூப்பர் ஸ்டார் நடிகராக வலம் வருபவர் சிரஞ்சீவி. இவரது மகனான ராம் சரணும் தற்போது தெலுங்கில் முன்னணி நடிகராக வலம் வருகிறார். ராஜமௌலி இயக்கத்தில் வெளியான 'ஆர்.ஆர்.ஆர்.' திரைப்படம் இவருக்கு இந்திய அளவில் ரசிகர்கள் பட்டாளத்தைக் கொடுத்தது. குறிப்பாக, ஆஸ்கர் விருதுக்கு 'ஆர்.ஆர்.ஆர்.' திரைப்படம் சென்றதும் உலக அளவில் ராம் சரண் நடிப்புக்கு கவனம் கிடைத்தது. விரைவில் அவர் ஹாலிவுட்டிலும் படங்கள் நடிக்க உள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

அந்த வகையில், 'ஆர்.ஆர்.ஆர்' படம் வெளியான போது ஹாலிவுட்டின் புகழ்பெற்ற தயாரிப்பாளரான ஜே ஜே ஏப்ரஹாம்ஸிடம் இருந்து அவருக்கு விருந்து அழைப்பு வந்தது. இதனைத் தொடர்ந்து ஹாலிவுட் இயக்குநர்கள் கௌன்சிலிடம் இருந்து அவருக்கு ஒரு சிறப்பு அழைப்பும் வந்தது.

தற்போது பிரபல ஓடிடி தளமான நெட்ஃப்ளிக்சின் உயர் அதிகாரியான டெட் ஸரண்டோஸை சந்தித்துள்ளார் நடிகர் ராம் சரண். இந்தியா வருகைத் தந்துள்ள டெட் ஹைதராபாத்தில் விமானத்தை விட்டு இறங்கியதும் நேராக நடிகர் சீரஞ்சிவி மற்றும் ராம் சரண் குடும்பத்தினரை சந்தித்துப் பேசியுள்ளார். மரியாதை நிமித்தமான சந்திப்பு இது எனச் சொல்லப்பட்டாலும் நெட்ஃப்ளிக்சுடன் சிறப்புப் படங்களில் ராம் சரண் நடிப்பதற்கு வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகிறது.

வரலாறு உலகம்

# பெய்ரூட் காசாவாக மாறும் ஹிஸ்புல்லாவிற்கு எச்சரிக்கை விடுத்த நேதன்யாகு



**இஸ்ரேல் : டிச. 9,**

**இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 240-க்கும் மேற்பட்டோர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், ஹமாஸ் மீது போர் பிரகடன் செய்து காசா மீது தாக்குதல் நடத்தியது.**

யாரும் எதிர்பார்க்காத வகையில் மூர்க்கத்தனமான வகையில் தாக்குதல் நடத்தியது. இதனால் காசாவின் வடக்குப்பகுதி சீர்குலைந்துள்ளது. தற்போது தெற்கு பகுதியிலும் தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளது. இதனால் பாலஸ்தீன மக்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்கள் தங்குவதற்கு இடமின்றி அல்லாடும் பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த தொடங்கியபோது, லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஹமாஸ்க்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இரண்டு முனைகளில் இருந்து வரும் தாக்குதலை எதிர்கொண்டு இஸ்ரேல் காசாவை துவம்சம் செய்தது. இதனால் ஹமாஸ்-இஸ்ரேல் இடையிலான போர் பிராந்திய போராக மாறக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆனால் எகிப்து, ஈரான் மற்றும் அரபு நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிடவில்லை. இருந்த போதிலும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் அவ்வப்போது ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஹிஸ்புல்லாவிற்கு இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள எச்சரிக்கையில் "ஹிஸ்புல்லா முழு அளவில் போரை தொடங்க முடிவு செய்தால், அதன் சொந்த கைகளால் பெய்ரூட்டை காசாவாகவும், தெற்கு லெபனானை கான் யூனிஸ் நகராகவும் மாற்றும்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையே ஹமாஸ்-இஸ்ரேல் மோதலை கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வருகிறது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிபர் ஜோ பைடன் நேதன்யாகு மற்றும் ஜோர்டான் அதிபர் அப்துல்லா ஆகியோரிடம் பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

நேதன்யாகுவிடம் ஜோ பைடன் பேசும்போது, காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணைக்கைதிகள் மற்றும் மேற்கு கரையில் பாலஸ்தீனர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது குறித்து பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நேதன்யாகு ஹிஸ்புல்லாவிற்கு எச்சரிக்கை விடுத்தது குறித்து தெரிவிக்கப்படவில்லை. காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் குழந்தைகள், பெண்கள் ஆவார்கள்.

# என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது

## மோடியை வெகுவாக பாராட்டிய புதின்



**ரஷ்யா : டிச. 9,**

**மோடியைப் போல் என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் புகழ்ந்து பேசியுள்ளார்.**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். பல்வேறு விஷயங்கள் குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்துள்ள அவர், பிரதமர் மோடியை பற்றி மிகவும் புகழ்ந்து பேசி உள்ளார். "பிரதமர் மோடி ஒரு வலுவான தலைவர். நாட்டுக்கான நல்லதொரு எந்த காரியத்திற்கும் தீர்க்கமான முடிவை தைரியமாக எடுப்பதில் அவர் போல் யாரும் இல்லை.

உண்மையாக சொன்னால், சிலநேரங்களில் இந்திய மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் அவரது கடுமையான நிலைப்பாட்டைக்கண்டுநான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். மோடியை போல் என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. இவரது கொள்கையால், இவர் எடுக்கும் முடிவால் இந்திய, ரஷ்யா நாட்டு உறவுகள் நிலைத்தன்மை வாய்ந்ததாக மாறாமல் பலமாக உள்ளது" என்று புதின் கூறியுள்ளார்.

# மார்ச் 17ல் ரஷ்ய அதிபர் தேர்தல் அதிகாரபூர்வமாக அறிவிப்பு



**ரஷ்யா : டிச. 9,**

**ரஷ்யாவில் மார்ச் 17ம் தேதி அதிபர் தேர்தல் நடைபெற உள்ளதாக மேல்சபை தலைவர் வேலண்டினா மேட்டிவியங்கோ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.**

ரஷ்யாவில் கடந்த 2000-ம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்டு விளாடிமிர் புதின் அதிகாரபூர்வ அதிபராக பொறுப்பேற்றார். அதிலிருந்து நான்கு முறை அவர் அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவரது பதவி காலம் 2024-ல் நிறைவடைகிறது. இந்நிலையில் ரஷ்ய பாராளுமன்ற மேல்சபை கூட்டத்தில் ரஷ்ய அதிபர் தேர்தலை 2024ம் ஆண்டு மார்ச் 17-ம் தேதி நடத்துவது என முடிவு செய்து சபை தலைவர் வேலண்டினா மேட்டிவியங்கோ தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானம் மீது பெடரேசன் கவுன்சில் உறுப்பினர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட கூட்டத்தில், செனட்டர்கள் ஒருமனதாக தேதியை அங்கீகரித்தனர். அதையடுத்து அதிபர் தேர்தல் பிரச்சாரத்துக்கான நடைமுறைகள் தொடங்கும் என்று தலைவர் வேலண்டினா மேட்டிவியங்கோ தெரிவித்தார். இதில் தீர்மானத்திற்கு ஆதரவாக 162 பேர் வாக்களித்தனர். பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

71 வயதான புதின் 5வது முறையாக அதிபராக தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அவர் அடுத்த 2 முறை அதிபர் தேர்தலில் போட்டியிட சட்டத்திருத்தம் பெற்றுள்ளார். இதன் மூலம் 2036 வரை புதின் அதிபராக நீடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 மாஜி கடற்படையினருடன் இந்திய தூதர் சந்திப்பு



**புதுடெல்லி : டிச. 9,**

**கத்தார் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 முன்னாள் இந்திய கடற்படை வீரர்களை கடந்த 3ம் தேதி இந்திய தூதர் சந்தித்ததாக வெளியுறவு அமைச்சகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.**

இந்திய கடற்படை முன்னாள் வீரர்கள் 8 பேர் கத்தார் நாட்டில் உள்ள அல் தஹ்ரா குளோபல் டெக்னாலஜிஸ் மற்றும் கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர்.

கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம், கத்தார் உளவுத்துறை 8 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தது. கடந்த அக்டோபரில் 8 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. உளவு பார்த்த குற்றச்சாட்டில் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்திய வீரர்கள் மீதான குற்றச்சாட்டுகளை கத்தார் அதிகாரிகளோ அல்லது மத்திய அரசோ வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக் ஷி நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறுகையில், "மரண தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டில் ஏற்கனவே இரண்டு முறை விசாரணை நடந்துள்ளது. இந்த வழக்கை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். அவர்களுக்கு அனைத்து சட்ட மற்றும் தூதரக உதவிகளையும் அளித்து வருகிறோம். கடந்த 3ம் தேதி அன்று சிறையில் இருக்கும் எட்டு பேரையும் இந்திய தூதர் சந்தித்தார்" என்றார்.

# ரிஷி சுனக்கின் பிரதமர் பதவி தப்புமா

## உட்கட்சிப் பூசலில் சிக்கித் தவிக்கும் ஆளும் கட்சி



**இங்கிலாந்து : டிச. 9,**

**புலம் பெயர்ந்தோரை ருவாண்டாவுக்கு நாடு கடத்தும் திட்டம் தொடர்பாக இங்கிலாந்தில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் வெடித்துள்ளதால் அந்த நாட்டின் பிரதமர் ரிஷி சுனக்கின் பதவி ஆட்டம் கண்டுள்ளது.**

சட்டவிரோதமாக, சிறுபடகுகள் மூலம் இங்கிலாந்துக்குள் நுழைந்து புகலிடம் கோரும் புலம் பெயர்ந்தோரை, ருவாண்டா என்னும் ஆப்பிரிக்க நாட்டுக்கு நாடு கடத்தும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இங்கிலாந்து அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால், உச்ச நீதிமன்றம் அந்த திட்டம் சட்டவிரோதமானது என்று கூறிவிட்டதால், அதை நிறைவேற்றுவதில் சிக்கல் உருவானது. ஆனாலும், அதை சட்டமாக்க வேண்டும் என்பதில் அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் உறுதியாக இருக்கிறார். அவர் சார்ந்த கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியினரில், பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் உள்துறைச் செயலர் சுவெல்லா உட்பட பலர், ருவாண்டா திட்டத்தை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதே கட்சியைச் சார்ந்த புலம்பெயர்தல் அமைச்சரான ராபர்ட் ஜென்ரிக் இந்த திட்டம் சரியானது அல்ல என எதிர்ப்பு தெரிவித்து ராஜினாமா செய்திருக்கிறார். அதனால் ரிஷி சுனக் இந்த விஷயத்தில் குழப்பத்தில் இருக்கிறார். இந்நிலையில், வரும் செவ்வாய்க்கிழமை, ருவாண்டா திட்டம் தொடர்பான மசோதா மீது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்று நடைபெற உள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சிக்குள்ளே ஒரு தரப்பினர் ருவாண்டா திட்டத்தின் கடுமை போதாது என்று கூற, மற்றொரு தரப்பினர், அதாவது எதிர்க்கும் தரப்பினர், அது சர்வதேச சட்டத்தை மீறுவதாக அமையக்கூடும் என கவலை தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், ரிஷி பிரதமரானதை சகித்துக் கொள்ளமுடியாமல் மனம் புழுங்கிக்கொண்டிருக்கும் ஒருகூட்டமும் கன்சர்வேட்டிவ் கட்சியில் உள்ளது.

அவர்களில் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள், புலம் பெயர்தல் அமைச்சரான ராபர்ட் ஜென்ரிக் ராஜினாமா செய்வதற்கு முன்பே, ரிஷி மீது நம்பிக்கை இல்லை என கடிதம் எழுதிவிட்டதாகவும், அப்படியே53பேர் கடிதங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், ரிஷி, கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் பதவியில் நீடிக்க வேண்டுமா என நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், ரிஷியோ, இதைப் பற்றி எல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் ருவாண்டா திட்டம் மீதான வாக்கெடுப்பில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார். மக்களுக்காக போராடுவோம், மக்கள் பக்கம் நிற்கிறோம் என்பதை மக்களுக்குக் காட்டுவோம் என்கிறார் அவர். தங்களுக்குள்ளேயே பிரிவினை கொண்ட கட்சிகள் வெற்றி பெறுவதில்லை என்று கூறியுள்ள ரிஷி, நாம் போட்டியிட வேண்டியது எதிர்க்கட்சிகளுடன் தானேயொழிய, நமக்குள்ளேயே அல்ல என்றும் கூறியுள்ளார்.

# வெளிநாடுகளில் இந்திய மாணவர்கள் அதிகம் இறக்கக் காரணம்

## மத்திய அரசின் வினோத விளக்கம்



**புதுடில்லி : டிச. 9,**

**கடந்த 5 ஆண்டுகளில், உயர்கல்வி பெறுவதற்காக வெளிநாடு சென்ற இந்திய மாணவர்களில் 403 பேர் உயிரிழந்துள்ளது குறித்து மத்திய அரசு கவலை தெரிவித்துள்ளது. அதேசமயம், வெளிநாடுகளில் இந்திய மாணவர்கள் அதிக அளவில் இறப்பது குறித்து மத்திய அரசு தந்திருக்கும் வினோத விளக்கம் சர்ச்சையாகி இருக்கிறது.**

'2018-ம் ஆண்டு முதல் குறைந்தது 403 இந்திய மாணவர்கள் விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வெளிநாடுகளில் இறந்துள்ளனர்' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த வகையில் உயர்கல்விக்காக 34 நாடுகளுக்குச் சென்ற இந்திய மாணவர்களில், ஒப்பீட்டளவில் கனடாவில் அதிக இறப்புகள் நேர்ந்துள்ளன.

மத்திய அமைச்சர் வி. முரளீதரன் மாநிலங்களவையில் இதற்கான தரவுகளை சமர்ப்பித்து கவலை தெரிவித்துள்ளார். அந்த தரவுகளின்படி, கனடாவில் 91 இந்திய மாணவர்களின் இறப்புகள் பதிவாகியுள்ளன. இந்த வரிசையில் இங்கிலாந்தில் 48 மாணவர்களும், ரஷ்யா 40, அமெரிக்கா 36, ஆஸ்திரேலியா 35, உக்ரைன் 21, ஜெர்மனி 20, சைப்ரஸ் 14, இத்தாலி 10 மற்றும் பிலிப்பைன்ஸ் 10 என இந்திய மாணவர்களின் மரணங்கள் வெளிநாடுகளில் பதிவாகி உள்ளன.

வெளிநாட்டில் உள்ள இந்திய மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான மையத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்திய அமைச்சர், தனிப்பட்ட வழக்குகளைத் தீர்ப்பதற்கும், எதிர்காலத்தில் எந்த விரும்பத்தகாத சம்பவங்களைத் தடுப்பதற்கும் உறுதியளித்தார். இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் வெளிநாடுகளின் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அங்கு பயிலும் இந்திய மாணவர்களுடன் தொடர்ந்து உரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

"வெளிநாட்டில் உள்ள இந்திய மாணவர்களின் பாதுகாப்பு என்பது இந்திய அரசின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்று. ஏதேனும் விரும்பத்தகாத சம்பவம் நடந்தால், அந்த சம்பவம் முறையாக விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய, தொடர்புடைய வெளிநாடுகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வலியுறுத்தி வருகிறோம். பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவசர மருத்துவ உதவி, தங்கும் வசதி உள்ளிட்டவற்றுடன் விரிவான தூதரக உதவியும் ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது" என்று அமைச்சர் முரளிதரன் உறுதியளித்துள்ளார்.

அதேசமயம், "அதிக எண்ணிக்கையிலான இந்திய மாணவர்களின் இறப்புக்கு, அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் வெளிநாடுகளுக்கு படிக்கச் செல்வதே காரணம்" என வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டிருக்கும் வினோத விளக்கம் சர்ச்சையாகி உள்ளது.

# வரி ஏய்ப்பு குற்றச்சாட்டில் பைடன் மகன் அதிபர் தேர்தலில் எதிரொலிக்குமா?



**வாஷிங்டன் : டிச. 9,**

**அமெரிக்க அதிபராக ஜோ பைடன் பதவி வகித்து வருகிறார். அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் பலமுனைப் போட்டிகளை எதிர்கொண்டுவருகிறார்.**

இந்நிலையில், அதிபர் ஜோ பைடனின் மகன் ஹண்டர் பைடன் வரி ஏய்ப்பு செய்த விவகாரத்தில் சிக்கியிருக்கிறார். இதுதொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 56 பக்க குற்றப் பத்திரிகையில், ஹண்டர் பைடன் 2016 முதல் 2020 வரை 7 மில்லியனுக்கும் அதிகமான டாலர் சம்பாதித்திருக்கிறார். இந்தப் பணத்தைப் எஸ்கார்ட், தோழிகள், சொகுசு ஹோட்டல்கள், கவர்ச்சியான கார்கள், ஆடைகள் என ஆடம்பரமாகச் செலவழித்திருக்கிறார். ஆனால், 2016 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச 1.4 மில்லியன் டாலர் வரியைச் செலுத்தாமல் வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருக்கிறார் என குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கு தொடர்பாக 9 குற்றச்சாட்டுகள் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

அதிபர் தேர்தலுக்காக தயாராகி வரும் நிலையில், ஹண்டரின் வரி ஏய்ப்பு தொடர்பான குற்றச்சாட்டு ஜோ பைடனுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, 2018-ல் துப்பாக்கி வாங்கியது தொடர்பாக ஹண்டர் மீது 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் தினமொரு புட்டி ஜான்சன்ஸ் பேபி பவுடரை ரசித்து ருசிக்கும் விசித்திரப் பெண்



**அமெரிக்கா : டிச. 9,**

**அமெரிக்காவில் ஒரு பெண் தினத்துக்கு ஒரு புட்டி ஜான்சன்ஸ் பேபி பவுடரை தின்பண்டமாகரசித்துருசித்து வருகிறார்.**

உலகில் உண்பதற்கு என எத்தனையோ ரகங்கள் நிறைந்திருக்கின்றன. இயற்கையில் விளைந்தது, செயற்கையாக தயாரானது, சமைத்தது, சமைக்காதது என பல நாடுகள், கலாச்சாரங்கள், வளங்கள் ஆகியவற்றின் பின்னணியில், ரகம் ரகமான உணவுகள் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றை தினத்துக்கு ஒன்றாக ருசி பார்ப்பதென்றால் கூட, இந்த ஜென்மம் போதாது. ஆனபோதும் சில விசித்திரப் பிறவிகள், வித்தியாசமான ருசி ரசனையோடு நம் மத்தியில் இருப்பார்கள். உணவுரகத்தில் சேராத விபரீத சேர்மானங்களை விழுங்குவதில் அவர்கள் ஆர்வமாகவும் இருப்பார்கள்.

அமெரிக்காவில் அப்படியொரு பெண், குழந்தைகளுக்கு பயன்படுத்தப்படும் பேபி பவுடரை தினமொரு புட்டியாக ருசித்து வருகிறார். அது ஆரோக்கியத்துக்கு கேடு என்பதை உணர்ந்திருந்தபோதும், அதன் சுவையிலிருந்து விடுபட முடியாது தவிக்கிறார். ட்ரேகா மார்டின் என்னும் 27 வயது பெண் திருமணமாகி, பொறுப்பான தாயாகவும் இருக்கிறார். ஆனபோதும், அனைவருடைய எச்சரிக்கையையும் மீறி அவருடைய விருப்பம் பேபி பவுடர் மீது இருக்கிறது.

குழந்தையை குளிப்பாட்டிய பின்னர் வழக்கமான தாய்மார்களைப் போலவே பேபி பவுடரை பயன்படுத்தும்போது, எதேச்சையாக அதனை ட்ரேகா ருசிக்க நேர்ந்தது. மக்காச்சோள மாவில் இதர வேதிசேர்மானங்கள் சேர்க்கப்பட்ட ஜான்சன்ஸ் பேபி பவுடரில் இருந்த ஏதோவொரு ருசி அவரைக் கட்டிப்போட்டது. அதன் பின்னர் வலிய பேபி பவுடர் ருசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். இந்த வகையில், லூசியானாவின் நியூ ஆர்லியன்ஸில் வசிக்கும் ட்ரேகா மார்டின் தினத்துக்கு 623 கிராம் கொண்ட ஜான்சன்ஸ் பேபி பவுடர் புட்டியை காலி செய்து வருகிறார்.

இதற்காக அவருக்கு இந்திய ரூபாய் மதிப்பில் ஆண்டுக்கு ரூ. 3.33 லட்சம் செலவாகிறது. பேபி பவுடரை வாய் நிறைய சேர்த்து அவை உமிழ் நீருடன் கரைவதன் ருசிக்கு தான் அடிமையாகிவிட்டதாக தன்னிலை விளக்கமும் தந்திருக்கிறார் ட்ரேகா. குடும்பத்தினர், நண்பர்கள் மட்டுமன்றி ஜான்சன்ஸ் நிறுவனம் சார்பிலும் எச்சரித்தாயிற்று, ஆனாலும் பேபி பவுடரை ருசிப்பதிலிருந்து ட்ரேகாவால் மீள முடியவில்லை. அடுத்த குழந்தையை வயிற்றில் சுமந்திருந்த மாதங்களில் மட்டும் பொறுப்பான தாயாக பேபி பவுடரை தவிர்த்திருந்தாராம். மற்றபடி பவுடரை ருசிக்காவிடில் அன்றைய பொழுது தனக்கு முழுமையடையாது என்கிறார் ட்ரேகா.

பேபி பவுடரை ருசிப்பதில் அமெரிக்காவின் ட்ரேகா மார்டினுக்கு, ஒரு 'அக்கா' இங்கிலாந்தில் இருக்கிறார். 5 குழந்தைகளுக்கு தாயான 44 வயதாகும் ஆன்டர்சன் என்ற பெண்மணி கடந்த 15 வருடங்களாக, தினத்துக்கு 200 கிராம் என ஜான்சன்ஸ் பேபி பவுடரை ருசித்து வருகிறார். இப்படி உணவு அல்லாதவற்றை ருசிக்கும் கோளாறை மருத்துவர்கள் 'பிகா' சிண்ட்ரோம் என்கிறார்கள். அவ்வாறானவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடுவது நல்லது.

# இந்திய வம்சாவளி ஓட்டல் அதிபர் சுட்டுக் கொலை : கொலையாளியும் தற்கொலை



**அமெரிக்கா : டிச. 9,**

**அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஓட்டர் அதிபர் மர்மநபரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்தவரும் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

குஜராத்தில் பிறந்த சத்யன் நாயக் (46), அமெரிக்காவில் வட கரோலினாவில் உள்ள நியூபோர்ட் பகுதியில் ஓட்டல் நடத்தி வந்தார். இவர் மனைவி, இரண்டு குழந்தைகள், தாயுடன் அங்கு வசித்து வந்தார். புதன்கிழமை ஓட்டலுக்குள் நுழைந்த மர்மநபர், சத்யன் நாயக்கை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் சத்யன் ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தார்.

இதையடுத்து துப்பாக்கியால் சுட்ட கொலையாளி தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார். உடனடியாக ஓட்டல் ஊழியர்கள், சத்யனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த நியூ போர்ட் காவல் துறையினர், விரைந்து சென்று துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டவர் உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தினர். அவர் பெயர் டிராய் கெலும் (59) என்பது தெரிய வந்தது. வீடற்ற அவர் எதற்காக சத்யனை சுட்டுக்கொலை செய்து விட்டு தற்கொலை செய்தார் என காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் வட கரோலினா பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# பாஜகவுக்கு எதிராக 30 ஆண்டுகள் போராடுவேன் எம்.பி பதவி பறிப்புக்குப் பின் மஹுவா

# டிசம்பர் 26ம் தேதி சென்னை வானகரத்தில் அதிமுக பொதுக்குழு கூட்டம்





# திருச்சி கொள்ளிடம் ஆற்றில் பாய்ந்த கார் கேரள தம்பதி உயிரிழப்பு


சென்னை / புதுக்கோட்டை | 09.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**கே. பி. ஜானகி அம்மாள்** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1917) (இ.1992)



**எ. கி. நாயனார்** , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1919) (இ.2004)



**வெ. தட்சிணாமூர்த்தி** , இந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி.1919) (இ.2013)




## இன்றைய நினைவு நாள்

**மதுரை சோமு** , தமிழகக் கருநாடக இசைப் பாடகர் (பி.1919) (இ.1989)



**சிவராம காரந்த்** , கன்னட எழுத்தாளர் (பி.1902) (இ.1997)



**சு. வில்வரத்தினம்** , ஈழத்துக் கவிஞர் (பி.1950) (இ.2006)



## பன்னாட்டு ஊழல் எதிர்ப்பு நாள்